பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 08 ஞாயிற்றுக்கிழமை 21.03.2021 கதிர் 04

## மகிழ்ச்சியான நாடுகளில் இலங்கைக்கு 129ஆம் இடம்

சர்வதேச மகிழ்ச்சி தினத்தையொட்டி ஐ.நாவின் நிலையான அபிவிருத்தி தீர்வுகள் வலையமைப்பால் 149 நாடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட உலக மகிழ்ச்சியான நாடுகள் தொடர்பான வருடாந்த மதிப்பீட்டுப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தனிநபர் சுதந்திரம், மொத்த தேசிய உற்பத்தி, ஆயுட் காலம்

☞ 2

தொழினுட்பப் பிரிவு

விஸ்டம்

A/L 2023

2021 Day

பொறியியற் தொழினுட்பவியல்

K.ரவிக்குமார் (Dip in Tech, NCTT, PGDE)

P.சண்முகதாசன் (Rtd Instructor Buildings - SLTES)

R.சிவரூபன் NCECP, NCT (Electrical & Electronic)

R.நிரூஜன் B.Sc

M.சுதாகரன் NDT, B.Ed

P.கிருபாகரன் NDT (Const Tech)

P.கணேஸ் NDT Automobile, (Instructor Automobile)

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

P.விமலநாதன் B.Sc

R.நிரூஜன் B.Sc

A.அரவிந்தன் B.Sc (Hons) Spel in Chem, PGDE

S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

P.நிரோஜனன் B.Sc (Bio Technology)

M.விஸ்ணுதேவன் B.Sc (Agri), PGDE

P.S.ஷாணஸ் B.Sc (Agri)

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்

S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

விவசாய விஞ்ஞானம்

P.S.ஷாணஸ் B.Sc (Agri)

புவியியல்

S.ஸ்ரீகிருஸ்ணா BA (Hons), PGDE (Merit)

கணிதம் (7)

S.தர்சன் B.Sc (Hons), PGDE (Merit)

M.கோபிஸ்கண்ணா NDT (Maths)

ஊடகக் கற்கை

S.கோணேசலிங்கம் Dip in Media

சித்திரம்

S.கருணாகரன் NDT, B.Ed

077 248 7774

076 552 9093

"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு"

### புதிய அரசமைப்புக்கான

# நிபுணர் குழுவை அமைக்கும்போது எம்முடன் கலந்தாலோசிக்கவில்லை

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் குற்றச்சாட்டு



**புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டிய மிக முக்கியமான விடயமாக தமிழ்த் தேசியப் பிரச்சினை உள்ள போதும், அரசமைப்பை வரைவதற்கான நிபுணர்கள் குழுவை அமைக்கும்போது, தங்களுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

**புதிய அரசமைப்பை வரைவதற்கான நிபுணர்கள் குழுவுக்கு, சம்பந்தன் இது குறித்த கடிதமொன்றை இம்மாதம் 18ஆம் திகதி அனுப்பி வைத்துள்ளார்.**

☞ 2

## வடக்கு, கிழக்கை பௌத்த மயமாக்குவதே தொல்லியல் திணைக்களத்தின் இலக்கு!



தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கை பௌத்த மயமாக்குவதை இலக்காக வைத்து தொல்லியல் திணைக்களம் செயற்பட்டு வருகின்றது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி, உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் தொல்லியல் அடையாளம் இருப்பதாகக் கூறி தொல்லியல் திணைக்களம் அகழ்வுகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் இதனைஎவ்வாறுகையாள்வது என்பது தொடர்பாக இன்று ஆலய நிர்வாகத்தினரும் தமிழ் அரசியல் தரப்புக்களும்

☞ 2

## 9 ஆண்களும் 6 பெண்களும் பசறை விபத்தில் உயிரிழப்பு

பதுளை - செங்கலடி வீதி 13ஆவது மைல்கல் பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட பஸ் விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 32 பேர் பதுளை மாகாண வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது எனவும் பசறை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் வைத்திய அதிகாரி கே.எம். சமரபந்து தெரிவித்தார்.

விபத்தில் உயிரிழந்தவர்களில் 9 ஆண்களும், 6 பெண்களும் அடங்குகின்றனர். பதுளைமாகாண வைத்தியசாலையில் 16 ஆண்களும், 14 பெண்களும்

☞ 2

## ஓட்டோவில் பஸ்ஸை துரத்திச் சென்று ஏறிய தம்பதியும் பசறையில் மரணம்!



பசறை 13 ஆம் கட்டைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் பலியான பெருந்துயர் சம்பவமானது ஒட்டுமொத்த நாட்டையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. குறித்த பஸ் விபத்தில் லுணுகலை அடாவத்தைப் பகுதியைச் சேர்ந்த அந்தோனி நோவா (வயது - 32), பெனடிக் மெடோனா

☞ 2

## உயிரிழந்தவர்களின் சடலங்கள் இன்றும், நாளையும் நல்லடக்கம்

### சோகத்தில் மூழ்கியது பசறை

பதுளை - செங்கலடி வீதி 13ஆவது மைல்கல் பகுதியில் நேற்று இடம்பெற்ற கோர பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் பதுளை மாகாண வைத்தியசாலையின் பிரேத அறையில் இருந்து இன்று அதிகாலை 3 மணியளவில் அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து

☞ 2

## கசிப்பை பக்கெட் செய்து பார ஊர்தியில் விநியோகம்

### வெற்றிலைக்கேணியில் சிக்கியது



**ந.லோகதயாளன்.**

யாழ்ப்பாணம், மார்.21

பக்கெட் செய்யப்பட்ட கசிப்பை பார ஊர்தியில் எடுத்துச் சென்று விற்பனையில் ஈடுபட்ட மூவர் வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடற்படையினரிடம் அகப்பட்டுக்கொண்டனர்.

கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக

☞ 2

## இந்தியப் பிரஜைகள் இருவர் நேற்று யாழில் இருந்து படலில் தப்பி ஓட்டம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.21

இலங்கையில் இருந்த இரு இந்தியப்பிரஜைகள் நேற்றைய தினம் படகு வழியாக தமிழ் நாட்டிற்குத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் 2018ஆம் ஆண்டு இந்தியர்கள் இருவர் இலங்கைக்

☞ 2

தாயகம் MATRIMONY

உலகலாவிய தமிழர்களுக்கான இணையவழி வரன் தேடும் சேவை.

www.thayagammatrimony.com

பதிவு இலவசம் 0773573406

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## 9 ஆண்களும் 6 பெண் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 9 பேருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது எனவும், 2 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக விசேட வைத்திய குழுக்களும், சுகாதார குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

விபத்தில் காயமடைந்தவர்களை மீட்டுவைத்தியசாலையில்சேர்ப்பதற்காக 8 அம்புலன்ஸ் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சி.சி.ரி.வி. காட்சிகளின்படி எதிர்திசையில் வந்த டிப்பர் ரக வாகனத்தைத் தாண்டி செல்ல முற்பட்ட வேளையிலே பஸ் வீதியைவிட்டுவிலகி 200 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தக் கோர விபத்து தொடர்பில் பசறை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உயிரிழந்தவர்களின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது உடல்களை இன்றும், நாளையும் நல்லடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை அவர்களது குடும்ப உறவினர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

லுணுகலை 24ஆம் கட்டைப் பகுதியில் உயிரிழந்த இரு இஸ்லாமிய சகோதரிகளின் உடல்கள் இன்று காலை நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. புகைப்படக் கலைஞர் டெனில் ஹரிஹரனின் உடல் ஹாலிஎல, குயின்ஸ்டவுனிலும், அடாவத்தை எல்ராடோவில் உயிரிழந்த கணவனும், மனைவியுமான நோவா, மெடோனா தம்பதிகளின் உடல்கள் அடாவத்தை புனித அந்தோனியார் ஆலயத்தின் சவச்சாலையிலும் இன்று மாலை அடக்கம் செய்யப்பட்வுள்ளன.

ஆசிரியர் முரளிதரனின் உடல் நாளை நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. ஏனையோரின் உடல்களும் நாளை நல்லடக்கம் செய்யப்பட்டவுள்ளன.

மீதும்பிட்டிய தொடக்கம் லுணுகலை வரையான பகுதிகளில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. வீதிகள் எங்கும் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. எங்கும் சோகமயமாகக் காட்சியளிக்கின்றன.

## கசிப்பை பக்கெட் செய்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் நேற்றைய தினம் வெற்றிலைக்கேணி கட்டைக்காடு பகுதியில் இரகசிய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரே கசிப்பை கைப்பற்றினர்.

இதற்போது பொலித்தீன் பைகளில் பொதிசெய்யப்பட்டுபார ஊர்தியில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட கசிப்பே கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. பார ஊர்தியில் இருந்த மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 4 பொதிகளில் 30 போத்தல் கசிப்பு கடற்படையினரால் மீட்கப்பட்டு பொலிஸார் ஊடாக சட்ட நவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

## இந்தியப் பிரஜைகள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரால் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். பொலிஸார் மூலம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இருவரும் யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

2020ஆம் ஆண்டு நாட்டில் கொரோனா உச்சம் பெற்றதனால் இந்த இரு இந்தியப் பிரஜைகளும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டனர்.

அப்படி ஈடுபட்ட சமயம் படகு உரிமையாளரின் முன் அனுமதி இன்றி நேற்றைய தினம் படகில் சென்று இந்தியாவின் இராமேஸ்வரத்தை அடைந்து இந்தியப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர்.

## ஓட்டோவில் பஸ்ஸை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 31) ஆகியோரும் உயிரிழந்தனர்.

இந்தத் தம்பதியினர் குறித்த பஸ்ஸை தவறவிட்டுள்ளனர். ஆனால், உரிய நேரத்தில் பதுளை வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் என்பதற்காக ஓட்டோவில் ஏறிச் சென்று பஸ்ஸைத் துரத்திப் பிடித்து ஏறியுள்ளனர்.

சில வேளை பஸ் சென்றுவிட்டது, பிறிதொரு பஸ்ஸில் செல்வோம் என அவர்கள் நினைத்திருந்தால் இன்று உயிருடன் இருந்திருப்பார்கள். விதி யாரைத்தான் விட்டுவைத்தது என்று மட்டுமே தற்போது கவலையடைய முடியும் என்று அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டனர்.

அதிலும் குறிப்பாக அந்தோனி நோவா என்பவர் தனது பிறந்த நாளிலேயே உயிரிழந்தும் உள்ளார்.

## வடக்கு, கிழக்கை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஆலயத்தின் தொன்மைகள் தொடர்பாவும் வரலாறுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் அனைத்து விடயங்களிலும் போராட வேண்டிய நிலையில் உள்ளோம்.

அரசின் தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் இராணுவத்தினர் பௌத்த பிக்குகள் சிலர் இங்கு வந்து சென்றுள்ளதுடன் வருகின்ற 23ஆம் திகதி அகழ்வுகளில் ஈடுபடவுள்ளதாக அறியமுடிகின்றது.

எங்களுடைய நிலங்கள், பாரம்பரியங்கள் இருக்கின்ற தெய்வ சந்நிதிகளிலே தங்களது பௌத்த சமயத்தை நிலைநாட்டுவதற்காக தொல்லியல் திணைக்களம் எனும் குழுவை அரசு உருவாக்கியுள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தங்களது பௌத்த அடையாளங்கள் இருக்கின்றன எனக் கூறி பௌத்த விகாரைகளை நிலைநாட்ட அரசு முயற்சிக்கின்றது.

பல ஆயிர வருடங்களாக இருக்கும் இந்த ஆலயத்தை ஆராய்ச்சி செய்து பார்க்க இவர்கள் எத்தனித்துள்ளார்கள். இந்த இடத்தை இராணுவத்தினர் பல வருடங்களாக ஆளுகைக்குள் வைத்திருந்தனர். அவர்களே இந்த ஆய்வைச் செய்ய பௌத்த மதகுருமாருடன் ஆர்வமாக உள்ளனர்.

இவற்றைத் தடுப்பதற்கு நாங்கள் சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எம்மிடம் இருக்கும் ஆதாரங்களை வைத்து தடை உத்தரவைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

எங்களுடைய பிரதேசங்களை மற்றும் எங்களுடைய தெய்வங்கள் இருக்கின்ற இடங்களைப் பௌத்த விகாரைகளாக - அடையாளங்களாக உருவாக்கி அதனை நிரூபித்து இந்தப் பிரதேசம் தங்களுடையது என்றும், இந்தப் பூமி உங்களுடையது அல்ல எங்களுடையது என்றும் வரலாற்று ஆவணங்களைத் தயாரிப்பதற்கு அவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

இதற்கு நாங்கள் இடம் கொடுக்காது எமது மண்ணை நாங்கள் காப்பாற்ற சட்ட நடவடிக்கை மற்றும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

## நிபுணர் குழுவை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நிபுணர்கள் குழுவுடன் நடத்தப்பட்ட சந்திப்பு மற்றும் அதன் பின்னர் பெப்ரவரி 24 ஆம் திகதி அந்தக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதம் மூலம் தம்மால் முன்வைக்கப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாக பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் சம்பந்தன் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நாட்டுக்கான புதியதோர் அரசமைப்பில் தீர்த்து வைக்கப்படவேண்டிய மிக முக்கியமான விடயம் தமிழ்த் தேசியப் பிரச்சினையேயாகும் என்ற போதிலும், ஜனாதிபதி உங்களுடைய குழுவை நியமித்தபோது எங்களோடு கலந்தாலோசிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும்.

எனினும், உங்கள் குழு பொது மக்களிடமிருந்து ஆலோசனைகளைக் கோரியபோது, நாம் அந்த நடைமுறையில் மிக ஆக்கபூர்வமாக ஈடுபட்டு எமது ஆலோசனைகளை அனுப்பி வைத்தோம்.

அதன் பின்னர் உங்களது அழைப்பின் பேரில் நாம் உங்களைச் சந்தித்து, தமிழ்த் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும், கடந்த 33 ஆண்டுகளில் எட்டப்பட்ட கருத்தொருமைப்பாட்டு விடயங்களை இனங்காண்பதில் உங்களது குழுவோடு இணைந்து செயற்படுவதற்கான எமது விருப்பம் குறித்தும் மேலும் விரிவாக எடுத்துரைத்திருந்தோம்.

ஏற்கனவே வாய்மூலமாகவும் எழுத்து மூலமாகவும் உங்களுக்கு அறிவிக்கப்பட்டவாறு, ஓர் ஐக்கிய, பிரிபடாத மற்றும் பிரிக்கமுடியாத நாடு என்ற வரையறைக்குள் தீர்வொன்றை காண்பதற்கு நாம் விரும்புகின்றோம். எனினும், அது இயன்றவரை அதிகூடிய அதிகாரப் பரவலாக்கத்துக்கு இட்டுச் செல்லும் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையிலானதாக அமைந்திருக்க வேண்டும்.

இது, இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கதோர், அரசமைப்பை வகுக்கும் உன்னதப் பணியில் உங்களோடு ஒத்துழைப்பதற்கான எமது விருப்பத்தை வெளிப்படுத்தும் ஒரு நினைவூட்டுதலாகும் - என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், ஐ.நா. செயலாளர் நாயகம், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## மகிழ்ச்சியான நாடுக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு மகிழ்ச்சியான நாடுகள் தொடர்பான பட்டியல் ஒவ்வொரு வருடமும் தயாரிக்கப்படுகின்றது.

அந்தவகையில் கடந்த முறை வெளியான மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் 130 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இம்முறை முன்னேறி 129 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

இதேவேளை, உலகில் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலில் பின்லாந்து முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன், டென்மார்க் இரண்டாம் இடத்தையும், சுவிற்ஸர்லாந்து மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

அத்துடன் 1 முதல் 10ஆம் இடம் வரையிலான நாடுகளில் 9 நாடுகள் ஐரோப்பிய நாடுகளாகும். அதேவேளை, ஆசிய நாடுகளில் சிங்கப்பூர் முன்னணியில் உள்ளது. இதன்படி பட்டியலில் 32ஆவது இடத்தில் அந்த நாடு உள்ளது.

அத்துடன் பட்டியலில் 149 இடத்தில் ஆப்கானிஸ்தான் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பயனற்ற ஐ.நா. கட்டமைப்பு

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஒரு முக்கிய நிகழ்வு அங்கத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு விடயத்தை விசேடமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஐ.நா. கட்டமைப்பையே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாவுங்கள் என்ற மாதிரியான ஒரு கேள்வியை நாசூக்கான சொல்லாடல்களில் அவர் முன்வைத்திருக்கின்றார்.

அதுவும் ஐ.நாவின் பொருத்தமான தளத்தில், பொருத்தமான சமயத்தில், பொருத்தமான மொழியில் அல்லது சொல்லாடலில் அவர் முன்வைத்திருக்கின்றார்.

வியன்னா பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான திட்டமிடல் தொடர்பான பொது விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

ஐ.நா. கட்டமைப்பு அதன் பிரதான நோக்கிலேயே – இலக்கிலேயே – தடுமாற்றத்துடன், பொறுப்பின்றி செயற்படுகின்றது என்பதைக் கோடி காட்டியிருக்கின்றார் அவர்.

ஒரு மக்கள் கூட்டம் தமது வாழ்வின் பிரிக்க முடியாத உரிமையான சுயநிர்ணய உரிமையைப் பெற்றிட நியாயமான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள உரித்துடையவர்கள் என வியன்னா பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான செயற்றிட்டம் கூறுகின்றது.

ஆனால், மக்கள் கூட்டங்களின் நியாயமான அந்த உரித்துக்களை அவை பெறும் முயற்சிகளில் உரிய ஒத்துழைப்பை – பங்களிப்பை – வழங்குவதில் ஐ.நாவும் அதன் அமைப்புகளும் பொறுப்புடன் செயற்படுவதில்லை என்பதே பிரதான குற்றச்சாட்டு.

“ஐ.நா. கட்டமைப்புகள் வெறும் பெயரளவில் சுயநிர்ணய உரிமையை வைத்திருக்கும் வரையில் அடக்கப்படுகின்ற அனைத்து மக்களும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள்” என்று ஐ.நா. ஏற்பாடு செய்த அந்தக் கூட்டத்தில் இடித்துரைத்திருக்கின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

சர்வதேச ரீதியில் அடக்கப்படுகின்ற – ஒடுக்கப்படுகின்ற – அடிமைப்படுத்தப்படுகின்ற – மக்கள் கூட்டங்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் நியாயமான நடவடிக்கையில் ஐ.நா. கட்டமைப்புகள் பொறுப்புடன் செயற்படுவதில்லை என்பதுதான் அவர் சுட்டிக்காட்ட முயலும் உண்மையாகும்.

இந்த விடயத்தில் இலங்கைத் தமிழர் விவகாரத்தையே முன்னுதாரணமாக முன்நிறுத்தி, ஐ.நா. கட்டமைப்புகள் மீது குற்றச்சாட்டு விரலை நீட்டுகின்றார். அவர்.

“இலங்கை அரசால் இழைக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் மத்தியில், தமிழ்த் தேசமானது தனது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டி அனுபவிப்பதற்காகப் போராடி வருகின்றது. இலங்கை அரசினால் தமிழர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்ந்து விடப்பட்ட போது, சுய நிர்ணய உரிமையைக் கொண்ட தனியான தேச மக்கள் என்ற முறையில் தமிழர்கள் தங்களைப் பாதுகாப்பதற்கே ஆயுத வழியைக் கையில் எடுத்தார்கள்.

“2002 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இரண்டு தரப்பினருக்கும் இடையில் போர் முனையில் ஏற்பட்ட இராணுவ வலுச் சம நிலையே இதற்கு அடிப்படைக் காரணம்” என்று தமது உரையில் சுட்டிக் காட்டினார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி.

அவர் குறிப்பிடுகின்றமை போல அச்சமயம் தமிழர் தாயகத்தில் 75 வீதமான நிலப்பரப்பை புலிகள் தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள்ளும் ஆளுகைக்குள்ளும் வைத்திருந்தனர்.

அந்தச் சூழ்நிலையில், களநிலை யதார்த்தத்தின் அடிப்படையில், ஈழத் தமிழர்களின் தேச அந்தஸ்தும் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்பட்டு, ஆகக் குறைந்தது இந்த அரசின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு, ஒரு சமஷ்டி ஆட்சி முறை உருவாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது என்ற உண்மையையும் அவர் வெளிப்படுத்துகின்றார்.

அப்படி நடந்திருந்தால் தமிழர்கள் தங்களின் சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கும் ஏதுநிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் நடந்ததோ வேறு தலைகீழ் நிகழ்வு.

சர்வதேசத்தின் பல்வேறு தரப்புகளின் ஆதரவுடன் கொழும்பு அரசு இராணுவ நடவடிக்கையையே தீர்வாக முன்வைத்து, தமிழர் தேசத்தை தொடர்ந்து அடக்கியாளும் தனது கொடூர அடக்குமுறையை தீவிரப்படுத்தியிருக்கின்றது.

இந்த விவகாரங்களை விளக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இவ்வாறான இராணுவ அடக்குமுறைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்க முனையாது, தனியான மக்கள் கூட்டங்களின் சுயநிர்ணய உரிமைக்கான நியாயங்களை ஐ.நா. சபையும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் பெயரளவிலான கோஷங்களாக வைத்திருக்கும் வரை சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்ற – அடக்கப்படுகின்ற – மக்களுக்கு நீதி, நியாயம் கிட்டப் போவதேயில்லை என்ற நிஜத்தையும் எடுத் தியம்புகின்றார்.

முற்றிலும் உண்மையான கருத்து இது.

# ஐ.நா. பிரேரணையை நிராகரித்தால் நெருக்கடிகள் மேலும் அதிகரிக்கும்!

## கலாநிதி. தயான் ஜயத்திலக எச்சரிக்கை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய பிரேரணையில் இலங்கை பற்றி மீளாய்வுக்காலம் ஆறுமாதங்களாகச் சுருக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியாக நிராகரித்தால் மேலும் மேலும் நெருக்கடிகளே அதிகரிக்கும் என்று ஐ.நாவுக்கான முன்னாள் வதிவிடப்பிரதிநிதியும் எதிர்க் கட்சித் தலைவரின் சர்வதேச உறவுகளுக்கான சிரேஷ்ட ஆலோசகருமான கலாநிதி.தயான் ஜயத்திலக தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கத்திற்கு மூன்று தெரிவுகளே காணப்படுகின்றன என்றும் அதில் எதனைத் தெரிவு செய்யப்போகின்றது என்பதிலேயே இலங்கையின் எதிர்காலம் உள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் நிறைவேற்றப்படும் இலங்கை பற்றிய தீர்மானத்தை நிராகரிக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, வெளிவிவகார செயலாளர் ஜெயநாத் கொலம்பகே ஆகியோர் தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் இடம்பெற்றனவாகக் கூறப்படும் விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து அறிவதற்காக நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முறையாக நடைமுறைப் படுத்தியிருந்தால் தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை உள்ளிட்ட நெருக்கடிகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கா.

துரதிஷ்டவசமாக, தற்போது பதவியில் உள்ள ஆளும் தரப்பினருக்கு அவ்விதமான சமிக்ஞைகள் எதனையும் கடந்த காலத்திலும் சரி தற்போதும் சரி வெளிப்படுத்தவில்லை. இந்நிலையில் தற்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னதாகவே அதனை எதிர்ப்பதாகக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள்.

இந்நிலையில் தற்போதைய பிரேரணை நிறைவேற்றப்படுமாக இருந்தால் இலங்கை முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கூறப்பட்டுள்ளது. அந்த விடயங்களை மேற்கொண்டே ஆக வேண்டும்.

ஏனெனில் இலங்கை பற்றிய மீளாய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் காலம் ஆறு மாதங்களாகச் சுருக்கப்பட்டுள்ளது. ஆகவே, அரசாங்கம் நல்லிணக்க மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களுக்கான செயற்பாடுகளைக் காண்பிக்க வேண்டும் அவ்வாறு இல்லாது விட்டால் மேலும் மேலும் நெருக்கடிகளே ஏற்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகரிக்கும்.

தற்போதை நிலையில் ஆட்சியாளர்களுக்கு மூன்று தெரிவுகளே காணப்படுகின்றன. முதலாவதாக முற்றாக ஐ.நா. தீர்மானத்தை எதிர்த்து சர்வதேசத்தைப் பகைத்துக்கொண்டு நடைபெறுபவைக்கு முகங்கொடுப்பதாகும்.

இரண்டாவதாக, மாகாண சபை முறைகளின் அதிகாரங்களை நீக்கி தேர்தலை நடத்தவிட்டு பின்னர் புதிய அரசமைப்பின் பெயரில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நீக்கிவிட்டு அதிகாரக்குவிப்பைச் செய்து இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தை காலங்கடத்தி ஏமாற்றுவதோடு அவ்வப்போது நெருக்கங்களையும் விரிசல்களையும் காண்பித்து சீரற்ற நிலைமைகளைப் பேணுதல். அதுமட்டுமன்றி இனக் குழுமங்களை மையப்படுத்திய நெருக்கடிகளை ஏற்படுத்துதல் மூன்றாவதாக, நிலைமைகளைப் புரிந்து ஐ.நா.தீர்மானத்துக்கு அமைவாக உள்நாட்டில் தேசிய ரீதியிலான வெளிப்படைத்தன்மையுடனான பொறிமுறையொன்றை ஏற்படுத்தி ஒவ்வொரு ஆறுமாத காலத்துக்கும் மீளாய்வு செய்யப்படும்போது முன்னேற்றகரமான நிலைமைகளை வெளிப்படுத்தல்.

இந்தத் தெரிவுகளுக்குள் ஒன்றைக் கையிலெடுக்கும் போது அதற்கான பிரதிபலன்களும் உடனுக்குடனே கிடைக்கும். – என்றார்.

# தீவிரவாதத்தை ஊக்குவித்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது!

கண்டி, மாவனெல்ல பகுதியில் தீவிரவாதத்தை ஊக்குவித்த குற்றச்சாட்டுக்காக 44 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த டிசெம்பர் 5 ஆம் திகதி ஐக்கிய அரபு எமிரேட்டஸிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்தபோது, அவரது நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் வழங்கப்பட்டன எனவும், தீவிரவாதத்தை ஊக்குவிப்பதற்காக அவர் நன்கொடைகள் மற்றும் நிதிகளை சேகரித்தார் எனவும் கூறப்படுகிறது.

இந் நிலையில் கைதான நபரிடமிருந்து பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் மடிக் கணினியொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டன எனவும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் சூத்திரதாரி சஹ்ரான் ஹாஷிமின் உறவினருடன் அவர் தொடர்புபட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

# பொலிஸார் மீது யாழில் தாக்கு!

## சந்தேகநபர்கள் தப்பி ஓட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

உறவினர்களுக்கு இடையே இடம்பெற்ற முறுகல் நிலையை விசாரணை செய்வதற்குச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் இன்று காலை யாழ்ப்பாணம் திருநகரில் இடம்பெற்றுள்ளது.

அதனையடுத்து திருநகருக்கு பெருமளவு பொலிஸார் அழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

தாக்குதல் நடத்திய சகோதரர்கள் இருவரும் நாவற்குழி பகுதிக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சகோதர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியர். ஒருவருக்கு கஞ்சா போதைப்பொருள் விற்பனை தொடர்பில் 3 வழக்குகள் நீதிமன்றில் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் கூறினர்.

திருநகரில் நேற்று சனிக்கிழமை இரவு குடும்ப உறவினர்களுக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் சைக்கிள் ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 119 அவசர பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் விசாரணையை முன்னெடுக்கச் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மேற்கு வங்க வளர்ச்சிக்கு தடையாக மம்தா பானர்ஜி

## பிரதமர் மோடி குற்றச்சாட்டு!



மேற்கு வங்க மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தடையாக திரிணாமுல் காங்கிரஸ் தலைவா மம்தா பானர்ஜி இருக்கிறார் என்று பிரதமர் நரேந்திர மோடி குற்றஞ் சாட்டியுள்ளார்.

மேற்கு வங்க சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி, கரக்பூரில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற பா.ஜ.க. பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்தார்.

'மேற்கு வங்கத்தில் ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தை ஆளும் திரிணமூல் அரசு செயல்படுத்தவில்லை. புதிய கல்விக் கொள்கையில் தாய்மொழியில் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த கல்விக் கொள்கைக்கு திரிணமூல் காங்கிரஸ் அரசு எதிர்ப்பு தெரிவிக்கிறது. இந்த மாநிலத்தைச் சேர்ந்த ஏழைக் குழந்தைகள் தாய் மொழியில் கல்வி பயின்று மருத்துவர்களாக வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ஆனால், லட்சக் கணக்கான ஏழைக் குழந்தைகளைப் பற்றி மம்தாவுக்கு கவலையில்லை.

கடந்த 70 ஆண்டுகளில் இந்த மாநிலத்தை ஆட்சி செய்த காங்கிரஸ் அரசு சூறையாடிவிட்டது அடுத்து வந்த இடதுசாரி அரசு அழிவை ஏற்படுத்தி விட்டது. திரிணாமுல் காங்கிரஸ் அரசோ மக்களின் கனவுகளைச் சிதைத்து விட்டது. மாநிலத்தின் வளாச்சிக்கு மம்தா பானர்ஜி தடையாக இருக்கிறார்.

இந்த மாநிலத்தை பா.ஜ.கவிடம் ஒப்படைத்தால், இதுவரை நடந்த பேரழிவுகள் அடுத்த 5 ஆண்டுகளில் சரி செய்யப்பட்டுவிடும்.

இந்த மாநிலத்துக்கு இரட்டை இயந்திர வளர்ச்சி தேவை. மாநிலத்தை வளாச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கு, மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சியின் ஆட்சி நடைபெற வேண்டும்.

நாடு முழுவதும் தொழில் தொடங்குவதற்கு விரைவில் அனுமதி பெற ஒற்றைச்சாளர முறையை பா.ஜ.க. அறிமுகம் செய்தது. நாட்டின் பிற பகுதிகள் தொழில் வளர்ச்சி பெற்று வரும் நிலையில், மேற்கு வங்கத்தில் மட்டும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. ஏனெனில் இங்கு மருமகன் (மம்தாவின் உறவினரும் டைமண்ட் ஹார்பா எம்.பி.யுமான அபிஷேக் பானர்ஜி) என்ற ஒற்றைச் சாளரத்திடம் அனுமதி பெற வேண்டியது. மிரட்டி பணம்பறிப்பவர்கள், ஊழல்செய்பவாகள் ஆகியோா மம்தாவின் அமைச்சரவையில் உள்ளனா.

பா.ஜ.கவை வெளிநபர்களின் கட்சி என்று மம்தா கூறுகிறார். பா.ஜ.கவின் முந்தைய அமைப்பான பாரதிய ஜன சங்கத்தை நிறுவிய தலைவாகளில் ஒருவரான சியாமர் பிரசாத் முகர்ஜி, மேற்கு வங்கத்தில் பிறந்தவர். அவர் இந்த மண்ணின் மைந்தர். பா.ஜ.கவின் பாரம்பரியத்திலேயே மேற்கு வங்கம் உள்ளது. எனவே, மேற்கு வங்கத்தின் உண்மையான கட்சி பா.ஜ.கதான்' என்று பிரதமர் மோடி தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# தமிழகத்தின் 15 ஆவது சட்டப்பேரவையின் இறுதிக் கூட்டத்தொடர் நிறைவுபெற்றது

தமிழகத்தின் 15 ஆவது சட்டப்பேரவையின் கடைசிக் கூட்டத் தொடரை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் முடித்து வைத்து உத்தரவிட்டார். இதற்கான அறிவிப்பை பேரவைச் செயலாளர் கி.சீனிவாசன் நேற்று சனிக்கிழமை வெளியிட்டார்.

தமிழகத்தின் 15 ஆவது சட்டப்பேரவைக்கு கடந்த 2016 ஆம் ஆண்டு பொதுத் தோதல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். அந்தவருடம் மே 23 ஆம் திகதி 15 ஆவது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் ஆரம்பமானது.



தமிழக அரசின் நம்பிக்கை வாக்கு கோரும் தீர்மானம், 110 ஆவது விதியின் கீழ் நூற்றுக்கணக்கான அறிவிப்புகள், எதிர்க்கட்சிகளின் வாதங்கள், ஆளும்கட்சியின் பதில்கள் என 15 ஆவது சட்டப்பேரவையின் அனைத்துக் கூட்டங்களிலும் அனல் பறந்தது.

இந்தச் சட்டப்பேரவையின் கடைசிக் கூட்டத் தொடர் ஆளுநர் உரையுடன் கடந்த பெப்ரவரியில் தொடங்கியது. இந்தக் கூட்டத் தொடரின் தொடர்ச்சியாக தமிழக அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த இரண்டு கூட்டங்களும் தலா நான்கு நாள்கள் நடத்தப்பட்டன.

15 ஆவது சட்டப்பேரவையில் கூட்டப்பட்ட 11 கூட்டங்கள் வாயிலாக மொத்தமாக 163 நாள்கள் அவை நடவடிக்கைகள் நடந்துள்ளன. இந்தச் சட்டப்பேரவையின் காலம் வரும் மே 23 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதற்குள்ளாக பேரவைக்கு பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட்டு தேர்தல் நடத்துவதற்கான பணிகள் தற்போது நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகள் தங்குமிடத்தில் தீ திட்டமிட்ட சதியா என சந்தேகம்



மத்திய அரசின் மூன்று வேளாண் சட்டங்களை இரத்துச் செய்ய வலியுறுத்தி டெல்லி எல்லையில் விவசாயிகள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இப்பகுதியில் அவர்கள் தற்காலிக வீடுகளை அமைத்து தங்கி தங்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

இந்நிலையில், சிங்கு எல்லையில் உள்ள விவசாயிகளின் தற்காலிகத் தங்குமிடத்தில் நேற்று மர்மமான முறையில் தீப் பரவல் ஏற்பட்டது. அது உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டவரப்பட்டு அதிக சேதமேற்படுவது தடுக்கப்பட்டது. இது தற்செயலான விபத்தா? அல்லது விவசாயிகளை மிரட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட வேலையா? என்பது கண்டறியப்படவேண்டும் என பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

# தடுப்பூசிகளை அவசியம் பெற்றுக்கொள்ளுங்கள் எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநர் அறிவுரை

இந்தியாவில் ஐ.சி.எம்.ஆர். மற்றும் பாரத் பயோடெக் இணைந்து கொவேக்சின் தடுப்பு மருந்தையும், சீரம் நிறுவனமும் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகாவும் இணைந்து கொவிஷீல்ட் தடுப்பு மருந்தையும் உருவாக்கி, கொரோனாவுக்கு எதிராக விநியோகித்து வருகின்றன.

இந்தத் தடுப்பு மருந்துகளை முதியோர்களும் 45 வயது முதல் 59 வயதுள்ள இணைநோய்கள் இருப்போரும் செலுத்திக்கொள்ள அரசு அறிவுறுத்தி வருகிறது.

இந்தியாவில்கொரோனாத்தடுப்பூசி போடும் பணிகள் வேகமாக நடந்து வரும் சூழலில், இந்தத் தடுப்பூசியின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்த தகவல்களை எய்ம்ஸ் மருத்துவனை இயக்குநர் ரன்தீப் குலேரியா தெளிவுபடுத்தியுள்ளார்.



'கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்புக்குப் பல்வேறு காரணங்களைக்கூறலாம். கொரோனா எங்களை என்ன செய்துவிடப்போகிறது எனும் மக்களின் மெத்தனமான மனநிலை தான் முக்கியமானது. எனவே, மக்கள் அவசியமற்ற பயணங்களை இன்னும் சிறிது காலத்துக்கு தவிர்க்க வேண்டும்.

கொரோனாத்தடுப்பூசிகள் 8 முதல் 10 மாதங்கள் வரை தொற்றில் இருந்து பாதுகாக்கும். அந்தக் காலப்பகுதி இன்னும் அதிகமும் இருக்கலாம். இரு தடுப்பூசிகளிலும் எந்தவிதமான மாறுபாடும் இல்லை. இரு தடுப்பூசிகளும் சமமான நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்கக்கூடியவை. நமக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது இந்தத் தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ள வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்தை நிதி ஆயோக் உறுப்பினரான (சுகாதாரம்) வி.கே. பாலும் ஆமோதித்தார். இதுகுறித்து கருத்துத் தெரிவித்த அவர், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் இணை நோயாளர்களிடமே அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. எனவே இந்தப் பிரிவினர் தடுப்பூசி போடுவதைத் தாமதிக்கக் கூடாது. குறைவான அளவே தடுப்பூசிகள் கிடைப்பதால் தான் அனைவருக்கும் உடனடியாகச் செலுத்த முடியவில்லை. பெரும்பாலான நாடுகளில் முன்னுரிமை அளிக்கப்பட்ட வயதினருக்கு மேல் கொரோனா தடுப்பூசி வழங்க முடியாமல் தடுமாறுகிறார்கள் என்று கூறினார்.

# மியன்மாரிலிருந்து வந்தவர்களை திருப்பி அனுப்பக் கூடாது

## பிரதமர் மோடிக்கு மிசோரம் முதல்வர் கடிதம்

'மிசோரமில் தஞ்சம் அடைந்துள்ள மியன்மார் பொலிஸாரை திருப்பி அனுப்ப முடியாது' என்று பிரதமர் மோடிக்கு அம்மாநில முதல்வர் சோரம்தங்கா கடிதம் எழுதியுள்ளார்.



மியன்மாரில் புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றியுள்ள இராணுவத்தை எதிர்த்து, அந்நாட்டு மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்கள் மீது இராணுவம் நடத்தி வரும் துப்பாக்கிச்சூட்டில் இதுவரையில் 200 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்நிலையில், அந்நாட்டைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட பொலிஸார், இராணுவ ஆட்சிக்குப் பயந்து இந்தியாவின் வடகிழக்கு பிராந்தியங்களுக்குத் தப்பி வந்துள்ளனர். இவர்களில் பலர் மிசோரம் மாநிலத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை உடனடியாகத் திருப்பி அனுப்பும்படியும் அண்டை நாடுகளில் இருந்து சட்ட விரோதமாக ஊடுருவி வருபவர்களை அனுமதிக்க வேண்டாம் என்றும் மிசோரம், அருணாச்சல பிரதேசம், மணிப்பூர் மற்றும் நாகலாந்து மாநிலங்களுக்கு மத்திய அரசு கடிதம் எழுதியுள்ளது.

இந்நிலையில், பிரதமர் மோடிக்கு மிசோரம் மாநில முதல்வர் சோரம்தங்கா நேற்று எழுதியுள்ள கடிதத்தில், 'அண்டை நாடுகளில் இருந்து அகதிகளாக வந்தவர்களை மனிதநேயத்துடன் அணுக வேண்டும். எனவே, மியன்மாரில் இருந்து வந்தவர்களை திருப்பி அனுப்பக் கூடாது. இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் எழுதியுள்ள கடிதம் எங்களுக்கு ஏற்புடையதாகத் தெரியவில்லை. மியன்மார் அகதிகளுக்கு தஞ்சம் அளிப்பது பற்றி விரைவாக முடிவு எடுக்க வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார்.

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

# கும்மிடிப்பூண்டியில் புதைத்து வைக்கப்பட்ட பழைய ஆயுதங்கள் செயலிழக்கச் செய்யப்பட்டன

15 ஆண்டுகளுக்கு முன்பு கும்மிடிப்பூண்டி அருகே உள்ள இலங்கை அதிகள் முகாமைச் சேர்ந்த சிறுவர்கள் மூன்று பேர் சிப்காட் பகுதியில் உள்ள கிணற்றில் குளிக்கச் சென்றபோது இரும்புப் பொருளொன்றைக் கண்டெடுத்திருந்தனர். அதனைக் கற்களால் உடைக்க முயன்றபோது அது வெடித்ததில் சிறு காயங்களுடன் மூவரும் உயிர் தப்பினர்.

தகவலறிந்த சிப்காட்பொலிஸார் நடத்திய விசாரணைகளில் அது வெடிகுண்டு என்பதும் கிணற்றுக்குள் மூட்டைமூட்டையாக பழைய துப்பாக்கிகளும் வெடிகுண்டுகளும் இருப்பதும் கண்டறியப்பட்டது.

இதனையடுத்து இந்திய இராணுவத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு இராணுவ அதிகாரிகள் சோதனை செய்து அவை அனைத்தும் பழைய ஆயுதங்கள் என்றாலும் வெடிக்கக்கூடிய நிலையில்தான் உள்ளன என உறுதிப்படுத்தினர்.



இதனையடுத்து இராணுவ அதிகாரிகள் மற்றும் பொலி ஸாரால் சிப்காட்டில் உள்ள இரும்பு உருக்காலைகள் சோதனை செய்யப்பட்டு ஏ.கே 47 துப்பாக்கிகள் மற்றும் வெடிகுண்டுகள் ஏராளமாகக் கைப்பற்றப்பட்டன. உருக்காலை உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த பழைய ஆயுதங்கள், அழித்து உருக்குவதற்காக அமெரிக்காவில் இருந்து கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டவை என்பது விசாரணைகளில் தெரியவந்தது. அவற்றைப் பறிமுதல் செய்த இராணுவத்தினர் அவற்றை மண்ணில் புதைத்து வைத்துள்ளனர்.

இந்த வெடிகுண்டுகள் எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம் என்றும் இதனால், கும்மிடிப்பூண்டி பகுதிக்கு ஆபத்து உள்ளது எனவும் பொதுமக்கள் தொடர்ச்சியாக முன்வைத்த கோரிக்கையை ஏற்று, 15 ஆண்டுகளுக்குப் பிறகு அவை செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன.

புனேயில் இருந்து வந்த 10 பேர் கொண்ட சிறப்பு இராணுவக் குழுவினர் மாதர்பாக்கம் காப்புக்காட்டு பகுதியில் வைத்து இந்தப் பணியை மேற்கொண்டிருந்தனர்.

# மிரட்டிப் பணம் பறிக்கும் பா.ஜ.க. மம்தா பானர்ஜி பிரசாரம்!



மிரட்டிப் பணம் பறிக்கும் பா.ஜ.க. மேற்கு வங்கத்தை ஆள ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்று அம் மாநில முதல்வரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானாஜி கூறியுள்ளார்.

மேற்கு வங்க மாநில சட்டப் பேரவைத் தோதல் வருகின்ற 27ஆம் திகதி தொடங்கி 8 கட்டங்களாக நடைபெற உள்ளது. அதற்கான தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள நிலையில், கிழக்கு மித்னாபூர் மாவட்டம் ஹால்தியா பகுதியில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வேட்பாளரை ஆதரித்து மம்தா பானர்ஜி பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

‘உலகிலேயே மிரட்டிப் பணம் பறிக்கும் மிகப் பெரிய அமைப்பாக பா.ஜ.க. விளங்குகிறது. பிரதமரின் அவசரகால நிதி (பிஎம் கோஸ் ஃபண்ட்) என்ற பெயரில் ஏராளமான பணம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், மக்களை கொல்வதற்காகவும் தலித் பெண்களை சித்திரவதை செய்வதற்காகவும் கலவரத்தை பா.ஜ.க. தூண்டிவிடுகிறது.

நாட்டின் வளங்கள் ஒவ்வொன்றையும் பிரதமர் விற்று வருகிறார். ரயில்வே, நிலக்கரித் துறை, பி.எஸ்.என்.எல்., ஆயுள் காப்பீடு நிறுவனம், வங்கிகள் என அனைத்துத் துறைகளும் தனியார் மயமாக்கப்பட்டு வருகின்றன.

எனவே, மேற்கு வங்க மாநிலத்தில் மக்கள் அமைதியை விரும்பினால் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும்.

தேர்தலையும் பா.ஜ.க. ஜனநாயக முறைப்படி எதிர்கொள்ளாது. ஒவ்வொரு கட்ட வாக்குப் பதிவு நிறைவுற்றதும், வாக்குப் பதிவு இயந்திரத்தை திரிணாமுல் காங்கிரஸ் தொண்டாகள் பாதுகாக்க வேண்டும். வாக்குப் பதிவு தொடங்கும்போது இயந்திரத்தில் கோளாறு எதுவும் ஏற்பட்டால், அதன் மூலம் முறைகேடு எதுவும் நடைபெறாததை தொண்டாகள் உறுதிப்படுத்த வேண்டும். பழுது சரிசெய்யப்படும் வரை அமைதி காக்கவேண்டும்.

மாநிலத்தில் திரிணாமுல் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஹால்தியா – நந்தி கிராமத்தை இணைக்கும் வகையில் பாலம் அமைக்கப்படும். ஹால்தியாவில் மீன்வள மேம்பாட்டு மையம் அமைக்கப்படும். தாஜ்பூரில் 25 ஆயிரம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 15,000 கோடி ரூபா செலவில் ஆழ்கடல் துறைமுகம் ஒன்று அமைக்கப்படும்’ என்று பா.ஜ.க. மீதான குற்றச்சாட்டுகளோடு தனது வாக்குறுதிகளையும் மம்தா பானர்ஜி தனது பிரசாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தின் கெஜுரி பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்ட மம்தா பானாஜி, ‘திரிணாமுல் காங்கிரஸிலிருந்து துரோகிகள் விலகியதால் கட்சி காப்பாற்றப்பட்டுள்ளது’ என்று அக் கட்சியிலிருந்து விலகி பா.ஜ.கவில் இணைந்து தனக்கு எதிராக களம் காணும் சுவேந்து அதிகாரியின் குடும்பத்தைக் குறிப்பிட்டு விமர்சனம் செய்துள்ளார்.

‘கெஜுரி, நந்திகிராம் அல்லது காந்தி பகுதிகளுக்கு நான் வர விரும்பிய போதெல்லாம், சுவேந்து அதிகாரியின் குடும்பம் என்னை வரவிடவே இல்லை. அவர்கள் இப்போது கட்சியிலிருந்து வெளியேறியிருப்பதால், நிம்மதியடைந்துள்ளேன். கட்சியும் காப்பாற்றப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளுக்கு வர என்னை யாரும் இனி தடுக்கமாட்டார்கள்’ என்றும் மம்தா பானர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கெதிரான ஐ.நா. தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்!

## பழ நெடுமாறன் வலியுறுத்து!

இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் கொண்டுவரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழர் தேசிய முன்னணித் தலைவர் பழ.நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘இலங்கை தமிழர்கள் மீது அந்நாட்டு அரசு மனித உரிமை மீறல்களை தொடர்ந்து கடைப்பிடித்து வருவதற்கு எதிரான கண்டனத் தீர்மானம் ஒன்றினை பிரிட்டன், கனடா, ஜேர்மனி உட்பட சில நாடுகள் இணைந்து ஐ.நா. மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் கொண்டுவர உள்ளன. இந்தத் தீர்மானத்துக்கு எதிராகவும் தனக்கு ஆதரவாகவும் வாக்களிக்கும்படி பல்வேறு நாடுகளை இலங்கை அணுகியுள்ளது.

வழக்கம்போல சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. இந்திய அரசும் ஆதரவு தெரிவிக்க உறுதி கூறியுள்ளதாக இலங்கை வெளியுறவுத் துறைச் செயலாளா அறிவித்திருப்பது தமிழர்களுக்கு அதிர்ச்சி அளித்துள்ளது.



2009 ஆம் ஆண்டில் இலங்கையில் போர் முடிந்த பிறகு, ஐ.நா. மனித உரிமைக் குழு நிறைவேற்றிய பல தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளவும் செயல் படுத்தவும் இலங்கை அரசு தொடர்ந்து மறுத்து வந்துள்ளது.

இந்த நிலையில் வருகிற மார்ச் 22 ஆம் திகதி கூடவிருக்கும் ஐ.நா. மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக பிரிட்டன் உள்பட பல நாடுகள் இணைந்து கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தை இந்திய அரசும் ஆதரிக்கவேண்டும். அதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு எதிரான அநீதிகளிலிருந்து அவர்களைக் காக்க முன்வர வேண்டும்’ என்று வலியுறுத்தியுள்ளார்.

# ரயிலில் புகைப்பிடிப்பவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள்



ரயில்களில் புகைப் பிடிக்கும் பயணிகளை சிறையில் அடைக்கவும் தீ விபத்து ஏற்பட்டால் அதற்கான சேதத் தொகையை குறித்த நபர்களிடமே வசூலிக்கவும் கடுமையான சட்டப் பிரிவுகளை உருவாக்க ரயில்வே திணைக்களம் முடிவு செய்துள்ளது.

ஓடும் ரயில்களில் தீ விபத்து ஏற்படுவது சமீப காலமாக அதிகரித்துள்ளது. கழிவறையில் புகைப் பிடித்து விட்டு பயணிகள் வீசும் மீதி சிகரெட் மற்றும் பீடி துண்டுகள்தான் இதற்குக் காரணம் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

டெல்லியில் இருந்து உத்தரகாண்ட் மாநில டேராடூனுக்குஷ சென்ற சதாப்தி எக்ஸ்பிரஸ் சிறப்பு ரயிலின் பெட்டியில் கடந்த 13 ஆம் திகதி திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

தீப்பற்றிய பெட்டியில் பயணிகள் உடனடியாக வேறு பெட்டிக்கு மாற்றப்பட்டு எரிந்து கொண்டிருந்த பெட்டி கழற்றி விடப்பட்டது. இதனால், பெரும் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த தீ விபத்து குறித்து பாதுகாப்பு படையினர் நடத்திய முதல் கட்ட விசாரணையில், கழிவறையில் புகைப்பிடித்து விட்டு பயணி ஒருவர் அங்குள்ள குப்பைத் தொட்டியில் அணைக்கப்படாத மீதித் துண்டை வீசி விட்டுச் சென்றதுதான் காரணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தத் தீ விபத்தால் அந்த ரயில் பெட்டி முழுமையாகச் சேதமானது.

இப்படியான சம்பவங்கள் அடிக்கடி நடப்பதால் ரயிலில் புகைப் பிடிக்கும் பயணிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கான சட்டப் பிரிவுகளை புகையிரதப் பாதுகாப்புச் சட்டத்தில் சேர்க்கும்படி அமைச்சர் பியூஸ் கோயல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இது குறித்து சட்ட நிபுணர்களுடன் அதிகாரிகள் தீவிர ஆலோசனை நடத்தி வருகின்றனர். அதன்படி, சில சட்டங்களை புதிதாக இணைத்துக் கொள்ள இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புகையிரதச் சட்டம் 167 ஆவது பிரிவின்படி, ரயில் பெட்டிகளில் பீடி, சிகரெட் பிடிக்கும் பயணிகளுக்கு தற்போது 100 ரூபா மட்டுமே அபராதம் விதிக்கப்படுகிறது. இந்தச் சட்டப் பிரிவுகள் கடுமையாக மாற்றப்பட உள்ளன.

அதன்படி, ரயில் பெட்டிகளில் பீடி, சிகரெட் பிடிக்கும் பயணிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என்றும் அவர்கள் புகைத்து விட்டு வீசும் பீடி, சிகரெட் துண்டுகளால் ரயிலில் தீ விபத்து, சேதம் போன்றன ஏற்பட்டால் கைது நடவடிக்கை மட்டுமின்றி சேதத்துக்கான முழுத் தொகையும் அவர்களிடம் இருந்து வசூலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்களில் புகைப்பிடிக்கும் பயணிகளை கண்டறிவதற்காக சாதாரண உடைகளில் பாதுகாப்பு அதிகாரிகள் ரோந்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் புதிய சட்டங்கள் பற்றிய ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தரப்பு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# மியன்மார் ஆட்சி கவிழ்ப்பு: மகளின் எதிர்காலத்திற்காக போராடும் பெண் தியாகம் மற்றும் பயத்துடன் தெருக்களில் இருந்து வரும் கதைகள்

நாவ் எனும் பெண் தேசிய வேலைநிறுத்தக் குழுவின் தலைவர். தனது ஒரு வயது மகளின் நலனுக்காக தான் போராட்ட்ங்களில் பங்கேற்பதாக அவர் கூறுகிறார், அவருக்கு(மகளுக்கு) ஒரு நல்ல எதிர்காலம் கிடைக்கும் என்று அவர் நம்புகிறார்.

மேலும் தெரிவிக்கையில் "நான் மியன்மாரில் ஒரு சிறுபான்மை இனமான 'கரேன்' என்ற குழுவின் அங்கத்தவர் ஆவேன், எனவே எதிர்ப்புத் தெரிவிப்பது எனக்குப் புதிதல்ல.

அதேபோல் இன்றைய போராட்டக்காரர்கள்,ஆலோசகர் ஆங் சான் சூகி மற்றும் ஜனாதிபதி வின் மைன்ட் ஆகியோரை விடுவிக்கவும், 2020 தேர்தல் முடிவை சரிபார்க்கவும் கோருகின்றனர்.

ஆனால், சிறுபான்மையினரான எங்களுக்கு அதிலும் ஆழ்ந்த கோரிக்கைகள் உள்ளன. மியன்மாரில் உள்ள அனைத்து தேசிய இனங்களுடனும் இணைந்து



ஒரு கூட்டாட்சி ஜனநாயக சங்கத்தை நிறுவுவதே எங்கள் பார்வை.

இராணுவம் பல ஆண்டுகளாக பிளவு மற்றும் வெற்றி மூலோபாயத்துடன் ஆட்சியை கைப்பற்றியிருந்தது, ஆனால் இப்போது அனைத்து தேசிய இனங்களும் ஒன்றுபட்டுள்ளன.

எனக்கு ஒரு வயதேயான மகள் இருக்கிறாள். அவள் என் செயல்களால் பாதிக்கப்படுவதை நான் விரும்பவில்லை. நான் கடந்துவந்ததைப் போல் ஒரு சர்வாதிகாரத்தின் கீழ் அவள் வளர்வதை விரும்பவில்லை என்பதால் என் மகளுக்காக நான் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன்.

நான் போராட்டத்தில் சேருவதற்கு முன்பு, அதை என் கணவருடன் விவாதித்தேன். இந்த இயக்கத்தில் நான் கைது செய்யப்பட்டால் அல்லது இறந்தால் எங்கள் குழந்தையை கவனித்தபடியே வாழ்க்கையை முன்னெடுத்து செல்லும்படி அவரிடம் கேட்டுக் கொண்டேன்.

இந்த புரட்சியை நாங்கள் சொந்தமாக முடிப்போம், அதை நம் எதிர்கால சந்ததியினரான எமது குழந்தைகளுக்கு ஒப்படைக்க மாட்டோம் என்றார்.

## ஈக்குவடாரில் சுகாதாரத்துறை அமைச்சர் இராஜினாமா; கொரோனா மருந்து ஊழல் புகார் தொடர்பாக எனத் தகவல்



தென் அமெரிக்க நாடான ஈக்குவடாரில் சுகாதாரத்துறை அமைச்சர் ரொடோல்ஃபோ ஃபார்டென் (Rodolfo Fardan) பொறுப்பேற்ற 19 நாள்களில் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அந்நாட்டில் கொரோனா தடுப்பு மருந்து வாங்கியதில் ஊழல் நடந்த புகார் குறித்து தலைநகர் குயிட்டோவில் உள்ள சுகாதாரத்துறை அமைச்சகத்தில் அதிகாரிகள் ஆய்வு நடத்தியதைத் தொடர்ந்து ஃபார்டென் தனது இராஜினாமாவை அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக பதவி விலகுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இவருக்கு முன்னதாக பதவியில் இருந்த ஜுவான் கார்லோசும் ஊழல் குற்றச்சாட்டு காரணமாக பதவியை இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு ஆஸ்திரேலியாவில் பெய்த கனமழையால் 50 ஆண்டுகளில் வரலாறு காணாத பெரு வெள்ளம்



வார இறுதியில் ஆஸ்திரேலியாவின் கிழக்கு கடற்கரையில் பெய்த கனமழையால் அரை நூற்றாண்டில் மிக மோசமான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் இன்று தெரிவித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்ததுடன் ஆயிரக்கணக்கானவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளனர்

நியூ சவுத் வேல்ஸ் பிரீமியர் கிளாடிஸ் பெரெஜிக்லியன் கூறுகையில், 8 மில்லியன் மக்களுடன் ஆஸ்திரேலியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலத்தின் குறிப்பாக சிட்னியின் வடமேற்கில் உள்ள தாழ்வான பகுதிகளில் முழுவதும் பெய்த மழையானது ஆரம்பத்தில் எதிர்பார்த்ததை விட மோசமானதாகும்.

## இங்கிலாந்தில் தொடர்ந்து 2 ஆவது ஆண்டாக ராணியின் பிறந்தநாள் கொண்டாட்டம் இரத்து



இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் 95 ஆவது பிறந்த நாள் அடுத்த மாதம் 21 ஆம் திகதி வருகிறது.

ராணியின் பிறந்த நாளையொட்டி ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி லண்டனில் 1,400 படைவீரர்கள், 200 குதிரைகள் அணிவகுப்புடன் மிகச்சிறப்பான கொண்டாட்டம் நடைபெறுவது வழக்கம். கடந்த ஆண்டு கொரோனா வைரஸ் பெருந்தொற்றால் பொது முடக்கம் அமுலில் இருந்ததால் இந்த கொண்டாட்டம் இரத்தானது. வின்ட்சார் கோட்டையில் எளிமையாக ராணியின் பிறந்த நாள் நிகழ்ச்சி நடந்தது.

இந்த ஆண்டும் கொரோனா காரணமாக ராணி இரண்டாம் எலிசபெத்தின் பிறந்த நாள் கொண்டாட்டம், தொடர்ந்து 2 ஆவது ஆண்டாக இரத்து செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்த தகவலை பக்கிம்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ளது.

## பூமிக்கு நெருக்கமாக இன்று கடக்கிறது பிரமாண்ட குறுங்கோள்; பாதிப்பில்லை

பூமி அருகே இன்று கடந்து செல்லும் குறுங்கோளால் பூமிக்கு எந்த பாதிப்பும் இல்லை என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

2001 எப் ஓ 32 என்று பெயரிடப்பட்டுள்ள அந்த குறுங்கோள், பூமியில் இருந்து 20 லட்சம் கிலோ மீற்றர் தொலைவில் கடந்து செல்ல உள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பல நூறு மீற்றர் நீளமும், விட்டமும் கொண்ட இந்தக் குறுங்கோளை கடந்த 20 ஆண்டுகளாக கண்காணித்து வருவதாகக் கூறும் விஞ்ஞானிகள் சூரியனை 810 நாள்களுக்கு ஒரு முறை சுற்றி வருவதையும் கண்டறிந்துள்ளனர்.

தற்போது பூமி அருகே கடந்து செல்லும் போது இதன் வேகம் மணிக்கு ஒரு லட்சத்து 24 கிலோ மீற்றர் ஆக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## இங்கிலாந்தில் இரவு நேர ஊரடங்கிற்கு மக்கள் எதிர்ப்பு

### பொதுமக்கள், பொலிஸார் இடையே தள்ளுமுள்ளு

இங்கிலாந்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை கலைக்க பொலிஸார் முயற்சித்த நிலையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இங்கிலாந்தில் இரவு நேர ஊரடங்கை அமல்படுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கான மக்கள் லண்டனில் உள்ள ஹைட் பூங்காவில் திரண்டனர்.

பாதுகாப்பு விதிமுறைகளை மீறி திரண்ட மக்களை பொலிஸார் கலைக்க முயன்ற போது அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பொலிஸார் மீது கையில் கிடைத்தவைகளை கொண்டு தாக்கியும், பொலிஸ் வாகனத்தில் பட்டாசுகளை தூக்கி போட்டும் பொதுமக்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.



## சீனத் தயாரிப்பு தடுப்பூசி போட்ட நிலையில் இம்ரான்கான் மனைவிக்கும் கொரோனா!

சீன தயாரிப்பு தடுப்பூசி போட்ட நிலையில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் மற்றும் அவரது மனைவிக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு தீவிர கண்காணிப்பில் உள்ளனர். கடந்த சில நாள்களுக்கு முன் சீனா தயாரித்த 'சினோஃபார்ம்' என்ற கொரோனாத் தடுப்பூசியை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் போட்டுக் கொண்ட நிலையில், அடுத்த 2 நாள்களில் அவருக்கு கொரோனா நோய்த் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

68 வயதாகும் இம்ரான்கான் அடிக்கடி கூட்டங்கள், அலுவலக ரீதியான சந்திப்புகளில் அதிகாரிகளுடன் பங்கேற்று வந்தார். சமீபத்தில் இஸ்லாமாபாத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற இம்ரான்கான் முகக்கவசம் இன்றி



புதிய வீட்டுவசதித் திட்டத்தையும் தொடங்கி வைத்தார். தற்போது அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதால் தனிமைப்படுத்தப்பட்டு தீவிர கண்காணிப்பில் உள்ளார். பாகிஸ்தானில் கொரோனா வைரஸ் பரவல் வேகமெடுத்து வரும்நிலையில் இதுவரை 6.15 லட்சம் பேர் வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். 13,700 பேர் உயிரிழந்துள்ளனர். பிரிட்டனில் கண்டறியப்பட்ட உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ் பாகிஸ்தானில் வேகமாகப் பரவி வருகிறது. இம்ரான்கானின் அரசியல் தொடர்பு உதவியாளர் ஈபாஸ் கில் வெளியிட்ட டுவிட்டர் பதிவில், 'பிரதமருக்கு கொரோனா அறிகுறிகள் தீவிரமாக இல்லை.

தற்போது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். லேசான இருமல், காய்ச்சல் மட்டுமே இருக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், இம்ரான் கானுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட சில மணி நேரங்களில் அவரது மனைவியும் நாட்டின் முதல் பெண்மணியுமான புஷ்ரா பீபிக்கும் கொரோனா உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவரும் தற்போது தனிமைப்படுத்தப்பட்டு தீவிர மருத்துவ கண்காணிப்பில் உள்ளார். இதற்கிடையில், இந்திய பிரதமர் மோடி கொரோனாத் தொற்றில் இருந்து இம்ரான் கான் விரைவில் குணமடைய வேண்டும் என்று டுவிட் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பொத்துவில் முதல் பொலிகண்டி வரை இயக்கத்தினரால் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் குழப்பும் வேலைத்திட்டம்

## சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவிப்பு



பொத்துவில் முதல் பொலிகண்டி வரை இயக்கத்தினர் போன்றவர்களைக் கொண்டு மட்டக்களப்பில் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் குழப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் அமைதியான நிலைமை இருந்து சகல துறைகளும் சீராக இயங்கும்போதே தொழிற்சாலைகளை மாவட்டத்திற்குக் கொண்டுவர முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு மட்டக்களப்பு, களுவாஞ்சி குடி பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பிருந்த அரசாங்கம் வேலைத்திட்டத்தினை முன்மொழியுமே தவிர அது நடைபெறுகின்றதா என்பதை அவதானிக்காது.

ஆனால், இந்த அரசாங்கம் சரியான நிர்வாகத் திட்டமிடலுடன் குழுக்களை அமைத்துத் திட்டங்களைக் கண்காணித்து வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வாழைச்சேனையில் புதையல் தோண்டிய 8 நபர்கள் கைது

வாழைச்சேனை,மார்ச் 21

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்தானை பகுதியில் வைத்து சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 8 சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தெரிவித்தார்.

பொத்தானைப் பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து, நேற்று வாழைச்சேனைப் பொலிஸாருடன் இணைந்து, அதிரடி கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, கண்டி, வாழைச்சேனை, ஓட்ட



மாவடி, இரத்தினபுரி, வெலிக்கந்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 8 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பூஜைப்பொருள்கள்மற்றும்ஆயுதப்பொருள்கள்கைப்பற்றப்பட்டதாகவாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி என்பனவும் மேலும் தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் இடம்பெற்று வரும் சட்டவிரோத செயல்களைத் தடுக்கும் வகையில், தனது தலைமையில், வாழைச்சேனை உதவி பொலிஸ்அத்தியட்சர்ஜி.ஜெயசுந்தரவின் வழிகாட்டலில், வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் விசேட குழு செயற்பட்டு வருவதாகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

## பெல்மதுளை பகுதியில் பணத்துடன் 44 வயதான பெண்ணொருவர் கைது

பெல்மதுளை,மார்ச் 21

பெல்மதுளை பகுதியில் 80 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்துடன் 44 வயதான பெண்ணொருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குறித்து பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக முச்சக்கர வண்டியில் அவர் பயணித்த போதே முச்சக்கர வண்டி தடுத்து நிறுத்தப்பட்டு, அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த பணத் தொகையானது அவருக்கு எவ்வாறு கிடைக்கப் பெற்றது என பொலிஸார் அவரிடம் வினவியபோதும், அதற்கான உரிய காரணத்தை அவர் வெளிப்படுத்தவில்லை.

இந்த நிலையில் அந்த பணத் தொகையினை சட்டவிரோதமான முறையில் சம்பாதித்தாரா அல்லது வேறு ஏதும் குற்றச் செயல்கள் மூலம் அந்த பணத்தை ஈட்டினாரா என்பது தொடர்பான விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ‘தேசத்திற்கு வெளிச்சம்’ திட்டத்தின் ஊடாக வவுணதீவில் மின்சாரம் வழங்கல் நிகழ்வு

மட்டக்களப்பு,மார்ச் 21

நாட்டைக்கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு ‘தேசத்திற்கு வெளிச்சம்’ எனும் தொனிப்பொருளில் மின்சார வசதியற்ற சமுர்த்திப்பயனாளிகளுக்கு இலவச மின்சார வசதியை ஏற் படுத்திக் கொடுக்கும் வேலைத்திட்டம் நாடு பூராகவும் இடம் பெற்று வருகிறது.

அந்த வகையில் நேற்று மட்டக்களப்பு வவுணதீவு - மண்முனை மேற்கு பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான மின்சார வசதி இல்லாத சமுர்த்திப் பயனாளிகளுக்கு இலவச மின்சாரம் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மின்சார சபை அத் தியட்சகர் ஏ.எல்.மாஹித், பிரதேச செயலக உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், முற்போக்கு தமிழர் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் சமுர்த்தி, மின்சாரசபை உத்தியோகத்தர்கள் உட்பட பொது மக்களெனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பொருளாதார புத்தெழுச்சி வறுமை ஒழிப்பிற்கான தலைவருமாக பஷில் ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் நடைமுறை அமுலாக்கலில் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் அனைவருக்கும் மின்சாரம், சுத்தமான குடிதண்ணீர் என்பன வழங்கப்படவுள்ளன.

அதே வேளை குறித்த நிகழ்விற்கு இணையாக மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான மின்சார வசதி இலவசமாக பெற்றுக்கொடுக்கும் ஆரம்ப நிகழ்வும் நேற்று இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினால் திருகோணமலையில் ‘தேசிய மகிழ்ச்சி தின’ நிகழ்வு

திருகோணமலை,மார்ச் 21

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘தேசிய மகிழ்ச்சி தின’ நிகழ்வு நேற்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர்.ஸ்ரீதர் தலைமையில் திருகோணமலை கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், ஆளுநர் செயலக உதவிச் செயலாளர், ஆயுர்வேத இணைப்பாளர்கள், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள கணக்காளர் என்.பாலநந்தன், நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எஸ்.நவேந்திரராஜா, திட்டமிடல் வைத்திய அதிகாரிகளான வைத்தியர் எஸ்.சிவச் செல்வம், வைத்தியர் எஸ்.உதயனன், கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் எஸ். துஷிதா, நிலாவெளி மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.நிரஞ்ஜன் மற்றும் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களிலும், தற்போதும் சுதேச மருத்துவ திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளும், வைத்தியமுறைகள் பற்றிய விளக்கங்களுடன் காணொளிகள் காண்பின்னப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



## 157 பொலிஸ் ரணவிரு தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு,மார்ச்,21

இலங்கையில் இறந்த பொலிஸ் வீரர்களை நினைவு கூறும் 157 பொலிஸ் வீரர்கள் (ரணவரு தினம்) நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை முன்றலில் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க தலைமையில் நடைபெற்ற பொலிஸ் ரணவிரு தின நிகழ்வில் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட சர்வமதத் தலைவர்கள்,முக்கிய பிரமுகர்கள், பொலிஸ் அதிகாரிகள், உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்கள் உட்பட பலரும் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பேணி கலந்து கொண்டனர்.

உயிரிழந்த பொலிஸாரின் நினைவாக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை முன்றலில் அமைக்கப்பட்டுள்ள நினைத் தூபியில் பொலிஸ் அதிகாரிகளும் உயிரிழந்த பொலிஸாரின் உறவினர்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

யுத்தம் மற்றும் காரணங்களால் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்கள் கண்ணீர் மல்க மலரஞ்சலி செலுத்தியமை விசேட அம்சமாகும்.

## மட்டு .மயிலாம்பாவெளியில் தொழில் முயற்சி மையம்

மட்டக்களப்பு ,மார்ச் 21

மட்டக்களப்பு மாவட்டத்திற்குட்பட்ட மயிலாம்பாவெளியில் உதவும் கரங்கள் அமைப்பின் உதவியுடன் தொழில் முயற்சி மையமொன்று கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

குறித்த தொழில்முயற்சி மையத்தின் ஊடாக 15 பெண் தலைமை தாங்கும் அங்கத்தவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ச.ஜெயராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு, குறித்த மையத்தினை திறந்து வைத்தனர்.

மயிலாம்வெளியில் உள்ள உதவும் கரங்கள் இல்லத்தில் குறித்த மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளமையுடன், இவ்வில்லத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற ஆதரவற்ற 75சிறுவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உணவு, உடை, கல்வி போன்ற அனைத்து வசதிகளும் உதவும்கரங்கள் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது, அரசாங்க அதிபரினால் புதிய இணையதளமொன்று அங்குராப்பணம் செய்துவைக்கப்பட்டமையுடன், மட்டக்களப்பினைச் சேர்ந்த கௌரிகாந்தன் லோகேந்திரா நிழல்பிரதி இயந்திரமொன்றையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், விரிவுரையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# புவனேஷ்வர் அசத்தல் பந்துவீச்சு: தொடரைக் கைப்பற்றியது இந்தியா!

புவனேஷ்வர்குமாரின் அபாரமான பந்துவீச்சின் உதவியோடு ஐந்தாவது இருபதுக்கு இருபது போட்டியில் வெற்றிபெற்ற இந்திய கிரிக்கெட் அணி, தொடரையும் தனதாக்கிக்கொண்டது.

நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியிலும் நாணயச் சுழற்சியில் விராட் கோலி தோல்வியடைய, இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார் இங்கிலாந்து அணித் தலைவர் ஒயின் மோர்கன்.

ஆரம்பத் துடுப் பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய ரோஹித் ஷர்மா (64), விராட் கோலி (ஆ.இ. 80) இணை 9 ஓவர்களில் 94 ஓட்டங்களைக் குவித்தது. அடுத்து வந்த சூர்யகுமார் யாதவ் மற்றும் ஹர்திக் பாண்ட்யா இருவரும் தலா 17 பந்துகளில் முறையே 32, 29 ஓட்டங்களைப் பெற, இந்திய அணி 20 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 224 ஓட்டங்களை எடுத்தது.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியில், ஜோஸ் பட்லர் (52), டேவிட் மலன் (68) இருவருமே நம்பிக்கையளித்தனர். ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழக்க, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக் கெட்டுக்களை இழந்த இங்கிலாந்து அணியால் 188 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

36 ஓட்டங்களால் நேற்றைய போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி, இருபதுக்கு இருபது தொடரையும் 3 – 2 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக 4 ஓவர்களில் 15 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்திய புவனேஷ்வர் குமாரும், தொடரின் நாயகனாக 3 அரைச் சதங்களோடு 231 மொத்த ஓட்டங்களைப் பெற்ற விராட் கோலியும் தெரிவானார்கள்.

இரு அணிகளுக்குமிடையிலான 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 23 ஆம் திகதி பூனேயில் ஆரம்பமாகவுள்ளது.



# இங்கிலாந்து பட்மின்டன் தொடர் அரையிறுதியில் சிந்து தோல்வி!

பேர்மிங்ஹாமில்நடைபெற்றுவரும்அனைத்துஇங்கிலாந்து பட்மின்டன் சம்பியன்ஷிப் தொடரின் நேற்றைய அரையிறுதிப் போட்டியொன்றில் இந்தியாவின் பி.வி. சிந்து தோல்வியடைந்தார்.

தரவரிசையில் ஏழாமிடத்திலிருந்த இந்தியாவின் பி.வி.சிந்து பதினோராமிடத்திலிருந்த தாய்லாந்தின் பொன்பவேயை எதிர் கொண்டு 21:17, 21:9 என்ற நேர் செட்களில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

இவர்களிருவரும் இதுவரை எதிரெதிராக விளையாடியுள்ள 5 சர்வதேசப் போட்டிகளில் நான்கில் சிந்து வெற்றி பெற்றிருந்ததால் நேற்றைய அரையிறுதியிலும் அவர் இலகுவான வெற்றியை அடைவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், நேற்று முன்தினம் நடைபெற்ற கடுமையான காலிறுதிப் போட்டி அவரது நேற்றைய ஆட்டத்திலும் தாக்கத்தைச் செலுத்த, பொன்பவே இலகுவாக வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளார்.

# இலங்கை – மே.இ.தீவுகள் டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பம்!

இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் விளையாடும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

அன்டிகுவா மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு கிரெய்க் பிரட்வைட்டும் இலங்கை அணிக்கு திமுத் கருணாரத்னவும் தலைமை தாங்குகின்றனர்.

இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற கடந்த ஐந்து டெஸ்ட் போட்டிகளில் மூன்று போட்டிகளில் இலங்கை வெற்றிபெற்றுள்ளது.

ஆயினும், அண்மைய நாள்களில் இலங்கை விளையாடிய நான்கு போட்டிகளில் தோல்வியுற்ற நிலையில்





இலங்கை அணி களமிறங்குவதால் மேற்கிந்தியத் தீவுகளுக்கான வெற்றி வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. 2020 ஜனவரியில் சிம்பாப்வேக்கு எதிராக பெற்றுக்கொண்ட வெற்றியே இறுதியாக இலங்கை அணி பெற்றுக்கொண்ட டெஸ்ட் வெற்றியாகும்.

மேற்கிந்தியத் தீவுகளோ, பங்களாதேஷுக்கு எதிராக 2 – 0 என்ற கணக்கில் பெற்றுக்கொண்ட வெற்றியோடு களமிறங்குகிறது.

இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.



# இருபதுக்கு இருபது தொடர் சிம்பாப்வேயை வென்றது ஆப்கானிஸ்தான்

அபுதாபியில் நடைபெற்ற மூன்றாவது இருபதுக்கு இருபது போட்டியில் சிம்பாப்வே கிரிக்கெட் அணியை 47 ஓட்டங்களால் வீழ்த்தி தொடரையும் 3 - 0 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் அணி தனதாக்கிக்கொண்டுள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கான் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்களைச் சேர்த்தது.

நஜிபுல்லா ஸர்தான் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும் உஸ்மான் கானி 39 ஓட்டங்களையும் பெற்றனர். சிம்பாப்வேயின் ரிச்சர்ட் நகரவாவும் முஸரபானியும் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலளித்த சிம்பாப்வே அணியால் 20 ஓவர்களில் 136 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. அதிகபட்சமாக சிக்கந்தர் ராஸா ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களைப் பெற்றார். ஆப்கானின் கரிம் ஜனட் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியில் 47 ஓட்டங்களால் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, தொடரையும் 3 - 0 என்ற கணக்கில் வென்றுள்ளது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக நஜிபுல்லா ஸர்தானும் தொடரின் நாயகனாக கரிம் ஜனட்டும் தெரிவானார்கள்.

முன்னதாக, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியிருந்த இவ்விரு அணிகளும் தொடரை 1 - 1 என்று சமன் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் போட்டிகளில் விளையாடமாட்டேன் என கூறவில்லை

### கிப் அல் ஹசன் அதிருப்தி!



'பங்களாதேஷ் அணி சார்பில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட மாட்டேன் என்று நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறவில்லை' என்று பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் ஷப் அல் ஹசன் தெரிவித்திருக்கிறார்.

ஏப்ரல் 21 முதல் மே 3 ஆம் திகதி வரை இலங்கைக்கெதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி விளையாடவுள்ளது.

இதே காலகட்டப் பகுதியில் இந்தியாவில் ஐ.பி.எல். போட்டிகள் நடைபெறவுள்ளதால் அதில் பங்கேற்பதற்காக தனக்கு விடுகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை ஷப் அல் ஹசன் கடிதம் மூலம் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் முன்வைத்திருந்தார். அதனையடுத்து, அதற்கான விடுகை அனுமதியும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் நிர்வாக அதிகாரிகளில் ஒருவரான அக்ரம் கான், 'இலங்கைக்கெதிரான இரண்டு டெஸ்களிலும் விளையாடுவதற்கு ஷப் அல் ஹசன் விரும்பவில்லை' என்று ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துக் குறித்து தனது எண்ணத்தை வெளிப்படுத்திய ஷப் அல் ஹசன், 'இது டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்குள் உள்ளடங்கியிருக்கும் ஒரு தொடராகும். என்றாலும், புள்ளிப் பட்டியலில் பின் தங்கியிருக்கும் எமது அணிக்கு இதில் கிடைக்கும் பெறுதிகள் எவ்வகையிலும் தாக்கம் செலுத்தப் போவதில்லை.

எனவே, இந்த வருட இறுதியில் இந்தியாவில் நடைபெறவிருக்கும் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவதற்கு நான் முக்கியம் தர விரும்புகிறேன். அதில் நாம் சாதிக்க முடியுமென்று நம்புகிறேன்.

அதற்கான சிறந்த பயிற்சிக் களமாக சர்வதேச வீரர்கள் பங்குகொள்ளும் ஐ.பி.எல். தொடர் அமையுமென்பதால் அங்கே சென்று விளையாட விரும்பும் என் எண்ணத்தை கிரிக்கெட் சபைக்கு கடிதம் மூலம் தெரிவித்து அனுமதி கேட்டேன். அதற்கான ஒப்புதலை எனக்கு வழங்கிய பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஸ்முல் ஹஸனுக்கு நன்றிகள்' என்று தெரிவித்துள்ளார்.

'அதே நேரம், நான் டெஸ்ட் போட்டிகளில் விளையாட விரும்பவில்லை என்று தெரிவிப்பவர்கள் இன்னமும் எனது கடிதத்தை வாசித்திராதவர்களாகவே இருப்பார்கள்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'எந்தவொரு நாடும், ஐ.பி.எல். போட்டிகள் நடைபெறும்போது வேறு தொடர்களை நடத்தாத நிலையில் பங்களாதேஷ் மட்டும் டெஸ்ட் தொடருக்கு ஒப்புதல் அளித்துள்ளமை ஆச்சரியமளிக்கிறது.

விளையாட்டு வீரர்களுக்குரிய மரியாதையை சொந்த நாடே வழங்காதபோது வெளிநாடுகளில் எப்படி அது கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது? வெளிநாட்டு வீரர்கள் நம் நாட்டுக்கு வரும்போது பணிவு காட்டும் நமது கிரிக்கெட் சபை, தனது வீரர்களுக்கு அதனை வழங்குகிறதா, என்பது பற்றி சிந்திப்பது அவசியம்' என்றும் ஷப் அல் ஹசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

'ஆப்கானிஸ்தான் அணி வீரர்கள் யாராவது வெளிநாட்டு லீக் போட்டிகளில் விளையாடுவதைத் தவிர்த்து தேசிய அணியின் போட்டிகளில் பங்கேற்கிறார்களா என்பதைக் கவனியுங்கள். வெளிநாடுகளில் விளையாட தனது வீரர்களை அனுமதிப்பதன் மூலம் வீரர்களதும், அணியினதும் அனுபவத்தையும் மதிப்பையும் அந்த நாட்டு கிரிக்கெட் சபை அதிகரித்து வருகிறது' எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மெக்ஸிகோ ஓபின் டென்னிஸ் தொடர் சம்பியனானார் ஸ்வெரேவ்

மெக்ஸிகோ ஓபின் டென்னிஸ் தொடரில் ஜெமனியின் அலெக் சாண்டா ஸ்வெரேவ் வெற்றி பெற்றுள்ளார். கிரீஸின் ஸ்டெபானோஸ் சிட்சிபாஸை எதிர்த்தாடிய இவர், 6 - 4, 7 - 6 என்ற செட்களில் அவரை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைப் பெற்றார்.



ஸ்வெரேவ் வெல்லும் 14 ஆவது ஏ.டி.பி. பட்டமாகவும் இந்த ஆண்டில் அவர் வென்ற முதல் பட்டமாகவும் இது அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

மெக்ஸிக்கோ ஓபின் டென்னிஸ் தொடரில் கிரீஸின் ஸ்டெபானோஸ் சிட்சிபாஸ் - ஜேர்மனியின் அலெக்சாண்டா ஸ்வெரேவ் ஆகியோா இறுதிச்சுற்றுக்கு முன்னேறினர்.

மெக்ஸிக்கோவின் அகாபுல்கோ நகரில் நடைபெற்று வந்த இந்தத் தொடரின் ஆண்கள் ஒற்றையர் அரையிறுதியில் உலகின் 5 ஆம் நிலை வீரரான சிட்சிபாஸ் 6 -1, 6 - 3 என்ற நோ செட்களில் இத்தாலியைச் சோந்த தகுதி நிலை வீரரான லோரன்ஸோ முசெட்டியை வீழ்த்தினார்.

போட்டித் தரவரிசையில் 2 ஆவது இடத்தில் உள்ள அலெக்சாண்டா ஸ்வெரேவ் தனது அரையிறுதியில் 6 - 4, 7 - 6 (5) என்ற நேர் செட்களில் ஜேர்மனியின் டொமினிக் கோஃபரை வீழ்த்தினார்.

தீபம் கல்வி நிலையம்
யாழ் மாவட்டத்தில் தனித்துவமான முன்னணி பாடசாலை ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்
A/L 2023 கலை, வர்த்தகப்பிரிவு
வர்த்தகப்பிரிவு
- கணக்கீடு — K.பாலகஜன் M.com (Acc.Spl.)
- பொருளியல் — V.ஜெகதீஸ் BA (Hons) Eco. Spl.
- வணிகம் — S.K.பாலசபேஷ் B.Com (HNDA)
கலைப்பிரிவு
- தமிழ் — இ.இ. வசீகரன் B.A.
- புவியியல் — K.T.ஜெராட் B.A. (Hons) Geo.Spl.
- அரசியல் — R. பாலகாந்தன்
- கிறிஸ்தவ நாகரீகம் — J.சரோன் B.A (Hons) Chri.Civil Spl.
- வரலாறு — K.கலைச்சந்திரன் B.A.(Hons), PGDE
- ICT — N.நிரோஜன் B.Sc in Computer Science
தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்
A/L 2023 அனுமதிகள் வழங்கப்படுகின்றன
இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
077 224 7781 நிர்வாகி

# சர்வதேச நீதிமன்றில் இலங்கையை பாரப்படுத்த தென்னாபிரிக்காவிடம் வேண்டுகோள் விடுப்பு!

## பொத்துவில் - பொலிகண்டி இயக்கம் கடிதம் மூலம் அறிவிப்பு

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்துவதற்கு உதவுமாறு தென்னாபிரிக்காவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் இந்தக் கோரிக்கையை முன்வைத்து தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தின் முழு விவரம் வருமாறு -

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்கு உதவுமாறு கோரி தென்னாபிரிக்காவுக்கான மேன்முறையீடு தொடர்பிலான கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தென்னாபிரிக்கா, உலகின் அதிகாரம் மிக்க நாடுகளில் ஒன்றாகவும், இனவொதுக்கலின் வலிக்கு உட்பட்டும், சர்வதேச விவகாரங்களில் ஈடுபாட்டைக் கொண்டும் உள்ளதுடன் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிறந்த புரிந்து ணர்வையும் கொண்டுள்ளதால், ஐக்கிய ராச்சியம், கனடா, ஜேர்மனி, மொன்ரினேக்றோ மற்றும் வட மசிடோனியா ஆகிய நாடுகளால் இணைந்து சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டு மாசி மாதம் 19 ஆம் திகதியிடப்பட்ட 'பூச்சிய வரைவு' என அழைக்கப்படுகின்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஐ.சீ.சீ.) பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்கு உதவுமாறு கோருகின்ற மேன்முறையீட்டின் பொருட்டு இதனை நாம் வரைகிறோம்.

இந்நாடுகள் இத்தீர்மானத்தை வரைந்தபோது பாதிக்கப்பட்டோரை கலந்தாலோசிக்கக் கூடவில்லை என்பதுடன் அவை தன்னிச்சையாக வரையப்பட்ட இப் 'பூச்சிய வரைவு' தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்க முன்னர் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட இணைந்த மேன்முறையீடுகளையும் புறக்கணித்துள்ளன.

பாதிக்கப்பட்டோராகவும் பாதிக்கப்பட்டோரின் பிரதிநிதிகளாகவும் 'பூச்சிய வரைவு' தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சி.சி.) பாரப்படுத்த வேண்டியமையை உள்ளடக்குவதற்கு உதவுமாறு தங்களிடம் நாம் மேன்முறையீடு செய்கிறோம்.

இப் 'பூச்சிய வரைவு' தீர்மானம் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் புரியப்பட்ட தமிழ் மக்களை கொத்துக் கொத்தாகக் குன்று குவித்தமை மற்றும் தமிழ்ப் பெண்களைப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கியமை அடங்கலான கொடூரமான குற்றங்களினால் பாதிக்கப்பட்டோரின் அடிப்படை எதிர்பார்ப்புக்களையேனும் பூர்த்தி செய்யவில்லை.

இந்நிலைவரத்தின் தீவிரத் தன்மையின் காரணமாக தமிழர்கள் ஒன்றிணைந்து ஒரு மாதத்துக்கு முன்னர் 2021 ஆம் ஆண்டு தை மாதம் 15 ஆம் திகதியன்று, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சி.சி.) பாரப்படுத்த வேண்டியமையை வலியுறுத்தி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர். இந்த அழைப்பு வடக்கு - கிழக்கு சிவில் சமூகத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை என்றழைக்கப்பட்ட அண்மைய பேரணியில் பங்குபற்றிய பல்லாயிரக் கணக்கான தமிழர்களால் மேலும் வலுச்சேர்க்கப்பட்டிருந்தது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சி.சி.) பாரப்படுத்தாமல் விடுதலானது கொடூரமான குற்றங்களைப் புரிந்தோர் நீதியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழிகோலுவதுடன் மாத்திரமல்லாது, அது இலங்கையின் அரசியற் தலைவர்களும் பாதுகாப்புப் படைப் பிரதானிகளும் தாம் நீதிக்கு முகங்கொடுக்கத் தேவையில்லை என்பதை நன்கறிந்து கொண்டு, எதுவிதத் தயக்கமும் இல்லாமல் தமிழ் மக்களிற்கு எதிரான சர்வதேசக் குற்றங்களைப் புரிவதற்கான துணிச்சலையும் ஏற்படுத்திவிடும். எனவே இலங்கையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சி.சி.) பாரப்படுத்தாமல் விடப்படின் தமிழ் மக்கள் எதிர்கொள்ளவல்ல இந்த அபாயத்தைத் தீவிரமாகக் கவனத்திற் கொள்ளுமாறு நாம் தங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் தற்போதைய உயர் ஆணையாளராகிய மிச்சேல் பச்சலெட் 2021 ஆம் ஆண்டு தை மாதம் 27 ஆம் திகதியிடப்பட்ட தனது அறிக்கையில், இலங்கையிலுள்ள நிலைவரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சி.சி.) பாரப்படுத்த வேண்டியமையை நோக்காகக் கொண்டு நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையிடம் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகளுக்கான நான்கு முன்னாள் உயர் ஆணையாளர்கள், ஒன்பது சுயாதீன ஐ.நா. நிபுணர்கள் மற்றும் இலங்கை சம் பந்தமான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வல்லுநர்கள் குழுவின் சகல உறுப்பினர் களும் அடங்கலாக இருபது முன்னாள் ஐ.நா. அதிகாரிகள் 'யுத்த விதைகளை விதைத்தல்' எனத் தலைப்பிடப்பட்டு 2021 ஆம் ஆண்டு மாசி மாதம் 18 ஆம் திகதி வழங்கிய தமது அறிக்கையில் இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சி.சி.) பாரப்படுத்தப்பட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கைதனது நீதித்துறை நிறுவனங்களை அதனுடைய பாதிப்புற்றோருக்காகச் செயற்பட முடியாதவையாக ஆக்கியுள்ளது என்பதே கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். எனவே, சர்வதேச அல்லது வெளிப்புற நியாயாதிக்கத்தினூடாக நீதியை நிலைநாட்டுவதன் பொருட்டு பாதிப்புற்றோருக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்குமாகப் பணியாற்றுவதற்காக உயர் ஆணையாளரின் பரிந்துரைகளை நாம் மீள வலியுறுத்துகிறோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி.) போன்ற பொறுப்புக் கூறலுக்கான சர்வதேச வழிவகைகள் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். - எனக் குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியப்பட்டுள்ள சர்வதேசக் குற்றங்களின் சில உதாரணங்கள்

1. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பொறுப்புக்கூறுதலுக்கான நிபுணர்கள் குழுவினுடைய 2011 ஆம் ஆண்டு பங்குனி மாத அறிக்கையின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான ஆயுதந் தாங்கிய யுத்தத்தின் இறுதி நிலைகளின் போது போர்க் குற்றங்களும் மனிதநேயத்துக்கு எதிரான குற்றங்களும் புரியப்பட்டுள்ளன எனவும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் மரணித்துள்ளதாகவும் நம்பத் தகு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

2. இலங்கை மீதான நடவடிக்கை தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக் குழுவின் 2012 கார்த்திகை மாத அறிக்கையின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

3. அரசாங்கத்தால் யுத்த சூனிய வலயங்கள் (பாதுகாப்பு வலயங்கள்) எனக் குறித்தொதுக்கப்பட்ட பிரதேசங்களில் இலங்கைப் படையினர் அடுத்தடுத்து குண்டுத்தாக்குதல்களையும் எறிகணை வீச்சுக்களையும் மேற்கொண்ட போது பலர் கொல்லப்பட்டனர். வைத்தியசாலைகள் மற்றும் உணவு விநியோக நிலையங்களின் மீது கூடக் குண்டுகள் வீசப்பட்டன. பலர் பட்டினியின் காரணமாக இறந்தமையுடன் மருத்துவ சிகிச்சையின்மையால் குருதிப்பெருக் கேற்பட்டும் மரணித்தனர்.

4. 2017 ஆம் ஆண்டு மாசி மாதம் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டம் , தமிழ்ப் பெண்கள் பாலியல் அடிமைகளாகக் கையாளப்பட்டு இலங்கை இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட கற்பழிப்பு முகாங்கள் பற்றிய விவரங்களை ஐ.நாவிடம் கையளித்தது.

5. ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் 2013 சித்திரை மாதத்திற்குரிய அறிக்கைக்கு அமைவாக, இலங்கையில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யுத்தமூல விதவைகள் உள்ளனர்.

6. குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் அடங்கலாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமற்போயுள்ளனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஐ.நாவின் பணிக்குழுவானது உலகில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் இரண்டாவது அதிகூடிய எண்ணிக்கை இலங்கையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சர்வதேசக் குற்றங்களுக்குரிய பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள பொய்யான வாக்குறுதிகளின் வரலாறு

அடுத்துவந்த இலங்கை அரசாங்கங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை அமுற்படுத்தத் தவறியுள்ளமையையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நாம் விரும்புகிறோம்.

முன்னைய அரசாங்கம் அது இணையனுசரணை வழங்கிய தீர்மானத்தை அமுல்படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது மாத்திரமல்லாது, முரணாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களும் தாம் தீர்மானத்தை அமுல்படுத்த மாட்டோம் எனத் திரும்பத்திரும்பவும் ஆணித்தரமாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய புதிய அரசாங்கம் ஒரு படி கூடுதலாகச் சென்று தீர்மானங்கள் 30/1, 34/1 மற்றும் 40/1 களுக்குரிய இணையனுசரணையிலிருந்து விலகியுள்ளதுடன் யூ.என்.எச்.ஆர்.சீ. பொறுப்புக்கூறல் செயற்பாட்டிலிருந்தும் வெளி நடப்புச் செய்துள்ளது. மேலும், யு.என். எச்.சி. ஆரை இழிவுபடுத்தும் விதமாக, சிறுவர்கள் அடங்கலாக பொதுமக்களைக் கொலை செய்தமைக்காக தண்டிக்கப் பட்டு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்த ஒரேயொரு படைச் சிப்பாயும் தற்போதைய ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டுள்ளார்.




# ஐ.நாவில் பிரேரணை நிறைவேறினால் வெளிநாட்டு படைகள் இங்கு வரலாம்!

## தமரா குணநாயகம் எச்சரிக்கை

- பிரேரணை மீது இலங்கை வாக்கெடுப்பைக் கோர வேண்டும்.
- தமிழ் மக்களின் விடயங்கள் துருப்புச் சீட்டாக மாற்றப்பட்டுள்ளது.
- சீன எதிர்ப்புக்காக இலங்கையைப் பயன்படுத்துகிறது மேற்குலகம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் நல்லிணக்கத்தை முன்னேற்றுதல் என்னும் தொனிப் பொருளிலான பிரித்தானிய தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் கூட்டிணைந்து முன்வைத்துள்ள பிரேரணை நிறைவேற்றப்படுமாயின் வெளிநாட்டு படைகள் இலங்கையில் தங்கு தடையின்றி பிரசன்னமாகலாம் என்று ஐ.நாவுக்கான (ஜெனிவா) முன்னாள் வதிவிடப்பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்தார்.

நிறைவேற்றப்படும் பிரேரணை தமிழ் மக்களின் விடயங்களுக்கு பொறுப்புக்கூறுவதற்கானவை என்று விம்பப்படுத்தப்பட்டாலும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள், இந்தியாவுடன் இணைந்து இலங்கையின் கேந்திரஸ்தானத்தினை தமக்குச் சார்பாகப் பயன்படுத்தி பூகோள ரீதியான சீன எதிர்ப்பை முன்னெடுப்பதே இலக்காகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரம், இலங்கை அரசாங்கம் பிரேரணையை நிராகரிப்பதாக தொடர்ச்சியாக கூறிவருகின்றது. உண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அப்பிரேரனை பெயிரிட்டு அறிவிக்கப்பட்டதும் இலங்கையின் சார்பில் உறுப்புரிமை கொண்ட நாடொன்று வாக்கெடுப்பினைக் கோர வேண்டும். அவ்வாறு கோராது நிராகரிப்பதாக பூச்சாண்டி காண்பித்துக்கொண்டிருப்பதால் எவ்விதமான பயனுமில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையின் உள்ளடக்கம் மற்றும் அப்பிரேரணை நிறைவேற்றப்படும் பட்சத்தில் ஏற்படவுள்ள அடுத்தகட்ட விடயங்கள் தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 1987 ஆம் ஆண்டு ஜனநாயக மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்ட தருணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகளே கோரப்பட்டிருந்தன. ஆனால் இந்திய விமானப்படைகள் உலருணவுப்பொருள்களை வடபகுதியின் வான் பரப்பில் பறந்து வழங்கியிருந்தன.

அதன்பின்னர் ஓரிரு மாதங்களுக்குள் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு இந்திய அமைதிகாக்கும் படைகள் வரவழைக்கப்பட்டன.

இந்திய அமைதிகாக்கும் படைகள் வடபகுதிக்கு வந்த வேளையில் அங்கிருந்த நிலைமைகளை அனைவரும் அறிவர். விடுதலைப்புலிகள் கூட அமைதிகாக்கும் படைகளை எதிர்த்திருந்தனர் என்றால் நிலைமைகளை அனைவரும் புரிந்து கொண்டிருந்தனர் என்பது தான் அர்த்தமாகும்.

இந்த நிலையில் தற்போதும் அவ்விதமான நிலைமையொன்றை ஏற்படுத்தவே முயற்சிக்கப்படுகின்றது. குறிப்பாக, இலங்கையின் கேந்திர ஸ்தானத்தை அடிப்படையாக வைத்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கையின் முழுப்பகுதியையும் தங்கு தடைகளின் தமது படைத்தரப்புக்கள் உள்ளிட்ட சுயநலன்களுக்கு பயன்படுத்தவே அதிகளவில் ஈடுபாட்டைக் கொண்டுள்ளன.

அத்துடன் அமெரிக்காவின் பூகோள சீன எதிர்ப்பின் ஓர் அங்கமாக இந்து - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னத்தை கட்டுப்படுத்துவதற்கு இந்தியாவை முன்னிலைப்படுத்தி இலங்கையைப் பயன்படுத்தவே விளைகின்றன. இதற்காகவே அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் உள்ள நான்கு நாடுகளின் கூட்டான 'குவாட்' அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மாலைதீவு, இலங்கை, இந்தியா பாதுகாப்பு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக அமெரிக்கா தனது படைகள் இலங்கையின் விமான நிலையங்கள், துறைமுகங்களை சுதந்திரமாக பயன்படுத்துவதற்கே முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே 2017இல் 'எக்ஸா' உடன்படிக்கையை கைச்சாத்திட்டதன் மூலமாக கணிசமான அளவில் இலங்கையில் பாதுகாப்பு படைகள் கூட்டுப்பயிற்சிகளையும் திறந்த பயணங்களையும் மேற்கொள்கின்றன. இந்த நிலைமையை மேலும் மேம்படுத்தவே எம்.சி.சி. மற்றும் சோபா ஒப்பந் தங்களைச் செய்வதற்கு அமெரிக்க முனைந்து வருகின்றது.

தற்போதைய நிலையில் எம்.சி.சி.ஒப்பந்தம் நிறுத்தப்பட்டதாக கூறப்பட்டாலும் திரைமறைவில் தனியார் மயப்படுத்தலின் ஊடாக வளங்கள் அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்களின் பின்னணியுடன் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன. இது நாளடைவில் அமெரிக்காவின் செல்வாக்கிற்கு முழுமையாகச் சென்றுவிடும் நிலையே உள்ளது.

இந்நிலையில், 'சோபா' ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு பெருமளவான முயற்சிகள் நடைபெறுகின்றன. இதுவும் படைகளின் பிரசன்னத்தை அடிப்படையாகக் கொண்டவை தான்.

இந்தப் பின்னணியில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணையில் மனித உரிமைகளை பாதுகாத்தல், மனிதாபிமான செயற்பாடுகளை ஊக்குவித்தல் உள்ளிட்ட விடயப் பரப்புக்கள் காணப்படுகின்றன.

இந்தத் 'தலைப்புக்களின் கீழேயே' அண்மைய தசாப்தத்தில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகத்தின் படைகள் பிற நாடுகளுக்குள் பிரவேசித்துள்ளன. உதாரணமாகக் கூறுவதாயின், ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மேற்குலப்படைகள் பிரவேசித்தமையை காணக்கூடியதாக உள்ளது.

சிரியாவிலும் அவ்வாறான நிலைமை காணப்பட்டபோதும் அங்கு அப்படைகளின் இலக்குகள் வெற்றி பெறவில்லை. ஆகவே இந்த விடயத்தில் இலங்கைப் பிரஜைகள் அனைவரும் பொறுப்புடனும் அவதானமாகவும் இருக்க வேண்டும்.




### துருப்புச்சீட்டாகும் தமிழ் மக்கள்

தமிழ் மக்களின் மீது அதிகளவான கரிசனைகளைக் கொண்டே மேற்குலக நாடுகள் ஐ.நா. அரங்கில் பிரேரணைகளைக்கொண்டுவருவதாகக் காண்பிக்கின்றது. இதனை தமிழ் மக்கள் நம்பி ஏமார்ந்துவிடக்கூடாது.

இதில் இந்தியாவுக்கும் பங்குகள் உள்ளன. இந்திய, மேற்குல கூட்டு, தமிழர்களின் விடயத்தை வைத்தே இலங்கையின் சீனாவுக்கு எதிரான தமது காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றன என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். இந்த வலைக்குள் தமிழ் மக்கள் சிக்கிக்கொண்டால் உள்நாட்டில் இனங்களுக்கு இடையிலான பிரிவினைகளே அதிகமாக இருக்கும்.

இதனால் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்படாது மேலும் மேலும் அதிகரித்தே செல்வதற்கு வித்திடுவதாக இருக்கும். ஆகவே தாம் பிறியதொரு தரப்பின் நலன்களுக்கு பயன்படுத்தப்படுகின்றோம் என்பதை தமிழ் மக்கள் பூரணமாக விளங்கிக் கொள்ளவது அவசியமாகின்றது.

### அரசு வாக்கெடுப்பைக் கோருதல் வேண்டும்

தற்போதைய அரசாங்கமானது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணை தொடர்பிலான விடயப்பரப்பு முன்னெடுக்கப்படும் தருணத்தில் உறுப்புரிமை கொண்ட நாடொன்றைப் பயன்படுத்தி வாக்கெடுப்பைக் கோர வேண்டும். அதனைவிடுத்து வெறுமனே பார்வையாளராக இருந்துவிட்டு பிரேரணையை ஏற்கவில்லை. தீர்மானத்தினை நிராகரிக்கின்றோம் என்று கூறுவதால் எவ்விதமான பயனுமில்லை. இலங்கை அரசாங்கம் வாக்கெடுப்பினைக் கோருவதன் ஊடாகவே சர்வதேச நாடுகளுக்கு இலங்கை அதற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றது என்பது வெளிப்படும். இந்த விடயத்தினை பலர் அறிந்திருப்பதில்லை.

வெறுமனே இலங்கை அரசாங்கம் நிராகரிப்பதாக ஊடகங்களுக்கு கூறிவருவதால் ஜெனிவாவில் எதுவும் நிகழ்ந்து விடாது.

தீர்மானம் நிறைவேற்றப்படும் போது இலங்கையும் பார்வையாளராக இருக்குமே தவிர அந்தசந்தர்ப்பத்தில் இலங்கையால் எதனையும் பிரதிபலிக்க முடியாது.

ஆகவே வாக்கெடுப்பினைக் கோருவதே பொருத்தமான செயற்பாடு. அதற்காக உறுப்புரிமை கொண்டதொரு நாட்டைத் தயார்ப்படுத்தவேண்டியது கட்டாயமாகின்றது. அவ்விதமான செயற்பாடு இம்முறை நடைபெற்றதா என்பது கேள்விக்குறியாகின்றது. ஆனால் பிரேரணையை நிராகரிப்பதாகது தொடர்ச்சியாக கூறப்படுகின்றது. இறுதியாக எமக்கு எதுவும் தெரியாது என்று பதிலளிக்க முடியாது. அமைதியாக இலங்கை அமர்ந்திருந்தால் அது பிரேரணையை ஏற்றுக் கொள்வதாகவே அமையும். - என்றார்.

இலங்கையில் கல்வி கற்ற பொறியியலாளர்களுக்கு ஆஸ்திரேலியா விசா !!!

Australian Skilled – Recognised Graduate Visa for Junior Engineers
(Graduated within 2 years)
18 Months to work and gain experience in Australia.

தகைமைகள்:
- வயது எல்லை 31
- பொறியியலாளர் பட்ட படிப்பு
- BSc.Engg from University of Moratuwa, University of Peradeniya, University of Jaffna, University of Ruhuna
- ஆங்கிலம் - IELTS average 6

தொடர்புக்கு:- HOTLINE: : 0766228891
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

# ஐ.நாவில் பொறுப்புக்கூறல் இலக்கை அடைய ஜெனிவாவில் முக்கிய பங்காற்றும் பிரித்தானியா

கொழும்பு, மார்ச் 21

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலுக்கான இறுதி இலக்கை எட்டுவதற்கான முக்கிய பங்காற்றும் என்று இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரித்தானிய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் பிரித்தானியாக கொண்டுவந்துள்ள பிரேரணை நிறைவேற்றப்படுமா?,

இலங்கை அரசாங்கம் அதனை நிராகரித்தால் பிரித்தானியாவின் அடுத்த கட்ட செயற்பாடு என்னவாக இருக்கும் என்பது தொடர்பில் கொழும்பில் உள்ள இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரித்தானிய உயர்தூதரகத்திடம் மின்னஞ்சல் மூலமாக வினவியபோது, அதன் பேச்சாளர் ஒருவர் வழங்கியபதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பதிலில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

நல்லிணக்கத்தை அடைவதற்கும், நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும், அதேபோன்று உண்மையைக் கண்டறிவதற்குமான சிறந்த வழியாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவை என்ற கட்டமைப்பு என்பதேசரியானவழியாகஇருக்குமென 2020 பெப்ரவரி, ஜுன், செப்ரெம்பர், ஆகிய மாதங்களில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட எமது அறிக்கைகளில் இணை அனுசரணை வழங்கும் குழுவானது மிகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

உள்ளூரில் வினைத்திறன் மிக்க பொறிமுறைகள் தோற்றம் பெறாதிருக்கும் நிலையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறுதலை அடைவதற்கான இறுதி வழிமுறையை எட்டுவதற்கு ஐ.நா.மனித உரிமைகள் பேரவையானது தொடர்ந்தும் மிக முக்கியமான பங்கினைக் கொண்டிருக்கும் என்று நாம் நம்புகின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலுக்குள் இலங்கையை தொடர்ந்தும் வைத்திருத்தல், இலங்கையின் பொறுப்புக்கூறும் கடப்பாடு மீதான சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான கவனத்தை சமிக்ஞையிடுதல், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உயர் தூதரகம் அலுவலகத்தின் பிரசன்னத்தை உறுதிப்படுத்தி தொடர்ச்சியான அறிக்கையிடலை மேற்கொள்வதற்கும் சாட்சியங்களை சேகரித்து பேணுதல், ஆகிய விடயங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உயர் தூதரகத்தின் அலுவலகத்தினை கோருவதற்கான புதிய தீர்மானமொன்றுக்கு ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் மிகவும் கடினமாக செயற்பட்டு வருகின்றோம். இதுவரையிலான பொறுப்புக்கூறும் கடப்பாட்டின் பலாபலன்களை பாதுகாப்பதற்கு இது மிகவும் முக்கியமானதாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 80 லட்சம் ரூபாவுடன் ஒருவர் கைதானார்!

பெல்மதுளை பகுதியில் 80 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்துடன் 44 வயதான பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குறித்து பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக ஓட்டோவில் அவர் பயணித்தபோதே ஓட்டோ வண்டி தடுத்து நிறுத்தப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பணத் தொகை அவருக்கு எவ்வாறு கிடைக்கப் பெற்றது என பொலிஸார் அவரிடம் வினவியபோதும், அதற்கான உரிய காரணத்தை அவர் வெளிப்படுத்தவில்லை.

இந் நிலையில் அந்த பணத் தொகையை சட்டவிரோதமான முறையில் சம்பாதித்தாரா அல்லது வேறு ஏதும் குற்றச் செயல்கள் மூலம் அந்த பணத்தை ஈட்டினாரா என்பது தொடர்பான விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## 90 ஆயிரத்தை அண்மிக்கும் கொரோனாத் தொற்றாளர்கள்!

கொரோனா, மார்ச்.21

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 90 ஆயிரத்தை அண்மித்திறது.

24 மணித்தியாலங்களில் மேலும் 349 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 89 ஆயிரத்து 846 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 86 ஆயிரத்து 466 பேர் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளநிலையில், தொற்றுக்கு உள்ளான 2 ஆயிரத்து 835 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேநேரம், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

பூவெலிகட பிரதேசத்தைச் சேர்ந்த 85 வயதுடைய ஆணொருவர் கண்டி தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மார்ச் 14 ஆம் திகதி உயிரிழந்தார்.

கொரோனா நிமோனியா நிலையே மரணத்துக்கான காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 545 ஆக அதி கரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆட்சிக்கு ஏற்றிய மக்களே வெட்கப்படும் நிலையில் அரசு!

கரு ஜயசூரிய காட்டம்



தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிப் பீடம்ஏற்றியமக்கள்,தற்போதுஅதனைஎண்ணி வெட்கப்படுகின்றனரென முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

ஆட்சிபீடம் ஏறுவதற்கு காரணமாக இருந்த 69 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள், தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாட்டைப் பார்த்து வெட்கப்படுகின்றார்கள்.

அதாவது எந்த அச்சமும் இல்லாமல் பட்டபகலில் நடந்த பல பெரிய மோசடிகளைப் பற்றி முழு நாடும் பேசுகிறது.

மேலும் சீனி இறக்குமதியின்போது இடம்பெற்றுள்ள பாரிய கொள்ளைக்கு அரசாங்கம் பதிலளிக்க மறுக்க முடியாது.

நாட்டில் பதிவான மிக மோசமான மோசடி என்று கருதப்படும் சீனி வரி மோசடி உட்பட அனைத்து பெரிய அளவிலான மோசடிகளில் ஈடுபட்ட அனைவரையும் ஜனாதிபதி, சட்டத்திற்கு முன் கொண்டுவர வேண்டும். - என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## நாடு திரும்பினார் பிரதமர் மஹிந்த!



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பங்களாதேஷுக்கு விஜயம் மேற்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அந்த விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

அதன்படி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினர் நேற்றுச்சனிக்கிழமை இரவு 8.45 மணியளவில் கட்டுநாயக்க, சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

பங்களாதேஷ் மக்கள் குடியரசின் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அழைப்பின் பேரில் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை பங்களாதேஷ் நோக்கி பயணமானார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டுநாள் பங்களாதேஷுக்கான விஜயம் இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை வளர்க்க உதவியது.

இருதரப்பு பேச்சு நிறைவு பெற்றதன் பின்னர் இரு நாட்டு பிரதமர்களின் முன்னிலையில் இலங்கை - பங்களாதேஷ் ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இளைஞர் விவகாரத்தை அபிவிருத்தி செய்தல், விவசாயத்துறை,திறன் அபிவிருத்தி பரிமாற்றல்,சுகாதார தாதிகள் சேவை பரிமாற்றம்,அனைத்துலக ஒத்துழைப்பு கல்வி மற்றும் 2021 - 2025 வரையிலான அனைத்து கலாசார பரிமாற்றம் செயற்திட்டம் ஆகிய விடயங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை ஆகும்.

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து, கஜகஸ்தான் பிரஜை காயம்!

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அபரேக்கவிற்கும் பெலியட்ட பரிமாற்றத்துக்கும் இடையில் நேற்று சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தொன்றில் கஜகஸ்தான் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

தனியார் வைத்தியசாலையின் அம்புலன்ஸ்லொறியுடன்மோதுண்டே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த கஜகஸ்தான் நாட்டைச் சேர்ந்த 29 வயதுடைய பெண் தற்சயம் தங்காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அம்புலன்ஸ், குறித்த வெளிநாட்டவரை கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையிலிருந்து மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்துக்குக் கொண்டு சென்றபோதே விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும் அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பிரிவு விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

## பண்டிகைக்கால விபத்தைக் குறைக்க பொலிஸார் விசேட நடவடிக்கைகள்!

சித்திரை புத்தாண்டு பண்டிகைக் காலத்தின் போது இடம்பெறும் வீதி விபத்துகளை தடுக்கும் வகையில் ஞாயிற்றுக்கிழமை முதல், ஒரு மாத காலத்துக்கு விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாட்டில் பண்டிகைக் காலங்களின் போதே அதிகளவான வீதி விபத்துகள் பதிவாகி வருகின்றன.

அதற்கமைய எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஞாயிறு முதல் விசேட போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நாடளாவிய ரீதியில் ஒரு மாதகாலம் மேற்கொள்ளப்படவுள்ள இந்த சுற்றிவளைப்பின் போது, மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகளை அடையாளம் காணுவதற்காக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும், பரிசோதனை ஊது குழாய்கள் அனுப்பப்பட்டுள்ளமையுடன், இத்தகைய குழாய்கள் 65 ஆயிரம் வரை பொலிஸ் தலைமையகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றையும் பொலிஸ் நிலையங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருள்களை பயன்படுத்தி வாகனங்களை செலுத்தும் சாரதிகளை அடையாளம் காணுவதற்காகவும் ஒரு கருவியொன்று கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அது தொடர்பான பரிசோதனைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

அந்த கருவியை பயன்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு முன்னர்,இத்தகைய போதைப் பொருள்களை பயன்படுத்தியுள்ளதாக யாராவது சாரதியொருவர் தொடர்பில் சந்தேகங்கள் ஏற்பட்டால், அவரை சட்டவைத்தியர் ஒருவரிடம் முன்னிலைப்படுத்தி அவரது குருதி மற்றும் சிறுநீரகம் தொடர்பில் பரிசோதனைகளை முன்னெடுத்து உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படும். இந்நிலையில் பஸ் உள்ளிட்ட வாகனங்களை பொதுப்போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்துவதற்காக வழங்கி வரும் நிறுவன உரிமையாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், தங்களது சாரதிகளுக்கு அது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கவேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.03.2021இல் வெளியிடப்பெற்றது.